1497

1 page 1497

# ஜகன்மோகினி



21 SEP 1934

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்.

| மலர் 11 | 1934 ஹு ஆகஸ்டு மீ | இதழ் 9 |
|---|---|---|

## கோவிந்தா! கோவிந்தா!

## புரட்டாசி மாதம்
## பிறக்கப்போகின்றது.

## எழுமலை வெங்கடாசலபதிக்கு
## ஒரு கோவிந்தம் போட்ரா
## கோவிந்தா!

மற்ற விவரங்களுக்கு இதனுள்ளிருக்கும் விளம்பரத்தைப் படியுங்கள்

...கன்மோகினி" ஆபிஸ்
...தோரடித்தெரு திருவல்லிக்கேணி
சென்னை.

தனிப்பிரதி விலை அணா 2.

JL
...211, N22J...
1934.11.9
182969

கோவிந்தா ! கோவிந்தா !

புரட்டாசி மாதம்

வருஷத்திற் கொரு முறைதான் வரும்

ஆனால் அம் மாதத்திய நிகழ்ச்சிகளை நீங்கள்

வேண்டும்போதெல்லாம் கேட்பதற்கு

# கொலம்பியா காமிக் பார்டியின்

# வெற்றிகரமான மூன்றாவது ரிகார்டை

# இப்பொழுதே வாங்குங்கள்

| | | |
|---|---|---|
| G. E. 326 | புரட்டாசி சனிக்கிழமை<br>திருப்பதி யாத்திரை | ரூ. 2/12. |

இந்த ரிகார்டின் ஒரு பக்கத்தில் புரட்டாசி சனிக்கிழமை யன்று நமது வீடுகளுக்கு வரும் பலவிதமான பிச்சைக்காரர்களின் பாடல்களும், மற்றொரு பக்கத்தில் திருப்பதி யாத்ரை செல்கை யில்—ரயிலில் ஏறியது முதல்—நடக்கும் சம்பவங்களும் மிகவும் வேடிக்கையாக இருக்கின்றன.

இந்த பார்டியின் முந்திய ரிகார்டுகளை (பொங்கலோ பொங்கல்! G. E 234, கௌரீ கல்யாணமே! G. E. 269) பொது ஜனங்கள் ஆயிரக் கணக்கில் வாங்கியிருப்பதால், இந்த மூன்றாவது ரிகார்டைப் பற்றி நாம் அதிகமாக எழுத வேண்டுவதில்லை.

இந்த ரிகார்டில் வரும் பாடல்களும், விஷயங்களும் எங்களது ஸெப்டம்பர் ஸ்ரீ கேட்லாக்கில் விவரமாக இருப்பதால் அதை உடனே வாங்கிப் படித்து, ரிகார்டை வாங்குங்கள்.

## ஆர்வ்ஸ் கொலம்பியா ஹவுஸ்.,

எல்லா "கொலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்,

# கவலை நீங்கி களிக்க தருணமிதே!



"பார்வதி பரிணயம்"
நடித்து, பெயர் பெற்ற
ஷைனிங் ஸ்டார்ஸ்
ஸொஸைடியாரின்
இப்புதிய

## "விநோத விவாஹம்"

எனும் ப்ரஹஸநத்தை
N. 8260–N. 8263 களில் கேளுங்கள்!
8 பாகங்கள்; விலை ரூ. 11/- மட்டுமே.



### அனைவருக்கும் இலவசம்!

இந்நாடகத்தின் பாட்டுக்களும், வசனமும் அடங்கிய புத்தகங்கள் தமிழ், மலையாள பாஷைகளில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இவைகள் இலவசமாக எங்கள் வியாபாரிகளிடம் கிடைக்காவிடில், எங்களுக்கு எழுதினால் தபால் சிலவின்றி அனுப்பித்தருகிறோம்.

தி கிராமபோன் கம்பெனி
லிமிடெட்,
45. ஸௌத்பரேட், பெங்களூர்.

# தி யுனைடெட் இந்தியா
## லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: மதராஸ்.) (1906-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி—சென்னை அபீஷியல் டிரஸ்டி.

2½ கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள்.
60 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.
14 லக்ஷத்திற்கும் மேலாகவே
வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில:—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.

இது ஜரூராகவும், பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்.
செம்புதாஸ் தெரு, சென்னை.

எம். கே. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

## 17-வது அதிகாரம்.

### மந்திரத்திற்குள் தந்திரப் புலி

**நா**யுடுகாருவைப் பிடித்து சிறையிலிடுவது போல அவரை ஓர் இரும்புக் கொட்டடியில் போட்டு அடைத்து விட்ட பிறகு நாம் அவர் என்னவானார் என்று கவனிப்போம். பூனைகள் தாம் தூங்குவது போலக் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தால் எலிகள் வந்து எட்டிப் பார்க்கும்போது லபக்கென்று பிடித்துக்கொள்ளும். அதே போல நாயுடுகாரு கண்ணையே திறக்காமல் சவுகரியமாக மூடி முக் காடிட்டுக்கொண்டு படுத்துவிட்டார். நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருப் பவர்போலப் பெரிய குரட்டைகளும் அடுக்கடுக்காக வருகின்றன.

நிமிடத்திற்கு ஒரு தரம் கும்பல் கும்பலாக இக் கூட்டத்தி னர் வந்து கதவருகில் நின்று பரிகாஸம் செய்வதும், கைகொட்டி நகைப்பதுமாக விருக்கிறார்கள். இவை முற்றும் நாயுடுவின் காதில் படாமலில்லை. ஒன்றையுமே அறியாதவர்போல அபிநயிக்கிறார். ஒவ் வொரு ஆசாமியும் "டேய்! நாயுடு! பலே! நல்லா குறட்டை விடு. பெரியதாகக் குறட்டை விடு. ஐயோ!பாவம்! உன் கதி ஓர் எலியைப் போலவா ஆய்விட்டது! ஹி ஹி ஹி!" என்று நகைத்துச் சென் றார்கள்.

182969.

இடி இடித்தாலும் அசைக்க முடியாத நாயுடுவா இந்த அல்ப மனிதர்களின் ஆரவாரத்திற்குப் பயப்படுகிறவர்? வாயேத் திறக்க வில்லை. " ஊமையாப் பூட்டாண்டா!....இல்லேடா! பெரிய துப்பறி யும் சிங்கம் இப்படி யகப்பட்டுக்கொண்டது பற்றி வெக்கண்டா அதான் ஊமை போல இருக்கான்......அதல்லாம் இல்லேடா: "நமக்கு மேலே துப்பறியும் புலிகள் அகப்பட்டுவிட்டதே இனி என்ன செய்வது. நாம் வெளியிலிருந்து அவமானப்படுவதை விட

இதைக் கேட்ட அக் குப்பைக்காரி திடுக்கிட்டு அலறிவிட்டாள். பேந்த பேந்த விழித்தவாறு வெளியில் செல்ல எத்தனித்தாள். நாயுடு அவளைத் தடுத்து இழுத்து. உள்ளே நிறுத்தி "அம்மா! நீ பயப்படாதே! நான் இக் கூட்டத்தைச் சேர்ந்தவனன்று. நான் போலீஸ்காரன் இவர்களைப் பிடிப்பதற்காக வந்திருக்கிறேன். நீ பயந்து நடுங்குவதிலிருந்து இவர்களிடம் அகப்பட்டவர்களில் நீயும் ஒருத்தி என்று தோன்றுகின்றது. நீ அப்படி அகப்பட்டவளாக விருந்தால் என்னைப் பூரணமாக நம்பினால் உனக்குப் பலனுண்டு. இல்லாது இக் கூட்டத்தைச் சோந்தவளாக விருப்பின் இதோ இத் துப்பாக்கியால் சுட்டுவிடுவேன்; உண்மையைக் கூறு'' என்றார்.

அம்மாது அலறிப்போய் இன்னது பேசுவதென்று தெரியாமல் சிறிது நேரம் திகைத்தாள். துப்பாக்கியைப் பார்த்ததும் முகத்தில் கூறவியலாத பயம் தோன்றிவிட்டது. மீன் குட்டிக்கும் நீந்த கற்றுக் கொடுக்கவேண்டுமா! இதே தொழிலில் ஊடாடும் நாயுடு இவளுடைய முகக் குறிப்பைக் கண்டதும் இவள் இக் கூட்டத்தைச் சேர்ந்தவளல்ல. கொண்டு வரப்பட்டவள்தான் என்று ஒரு நொடியில் தெரிந்துகொண்டார். "அம்மா! நீ சற்றும் பயப்படாதே! நீ இங்கு எப்படி வந்தாய் தெரிவி'' என்றார். அவள் பதில் பேசவே பயந்துவிட்டாள். பாவம். எத்தனை கேட்டாலும் பதிலே பேசாமலிருந்ததால் அது ஊமை என்று நாயுடு எளிதில் தெரிந்துகொண்டு பரிதாபப்பட்டு அவளை ஜாடையினாலேயே தேற்றி துப்பாக்கியைக் காட்டியபடியே சில குறிப்புகளைச் சைகை செய்தார்.

அந்த ஊமையும் இடுப்பிலிருந்த குப்பை கூடையைக் கீழே வைத்துவிட்டு நாயுடு கொடுத்த துணியை உடுத்திக்கொண்டு புடவையைக் கொடுத்தது. நாயுடு தான் போட்டிருந்த உடைகளை அப்படியே அந்த ஊமைக்குப் போட்டு விட்டு, ஊமையின் புடவை ரவிக்கை முதலியதைத் தான் உடுத்திக்கொண்டார். தன் சொக்காய்ப் பையிலும் தலைப்பாக்கைக்குள்ளும் ரகஸியமாய் வைத்திருந்த சாமான்களை ஜாக்ரதையாக மடியில் கட்டிக்கொண்டு அதில் ஒரு

மருந்தை எடுத்து ஊமையின் வாயில் பலவந்தமாக ஒரு துளி வார்த்து அதை ஒரு மூலையாகப் படுக்க வைத்துவிட்டார்.

தன் தலைப்பாகைக்குள் வைத்திருந்த டோபாவை எடுத்துக் கட்டிக்கொண்டு ஊமைச்சியைப்போலவே முடிந்துகொண்டு க்ஷவரம் செய்த வடுக்கள் தெரியாமலிருக்க ஒரு மருந்தைப் பூசிக்கொண்டு தன் வேஷம் சரியாக விருக்கிறதா வென்பதைப் பார்த்துக்கொண்டு தலைவிதியே என்று இடுப்பில் குப்பைக் கூடையைச் சுமந்தவாறு அவ்வறையை விட்டு வெளியில் வந்துவிட்டார்.

ஆனால் தான் எங்கெங்கே குப்பை வாரவேண்டும். என்ன செய்யவேண்டும் என்பது ஒன்றும் தெரியாதாகையினால் தன்னை யார் வந்து சந்தேகித்துப் பிடித்துக்கொள்வார்களோ என்ற பயம் ஒரு புறம் பாதிக்கிறது. ஆனால் இருட்டு புரியவில்லை யாகையினால் அங்குள்ள சகலமான விடங்களையும் சுற்றிப் பார்த்துவிட இதுவே சமயம் என்று தெரிந்துகொண்டு குப்பைக் கூடையுடன் சுற்ற வாரம்பித்தார். சில வேலைக்காரர்களைத் தவிர எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

தட்டானுக்கு வேண்டிய சாமான்கள், பட்டரை, குயவன் சாமான்கள், தகரச் சாமான்கள், இரும்புச் சாமான்கள், பித்தளை வெங்கலம், ஈயம், கைவேலைக்கான சாமான்கள், அனேக சர்க்காக்கள், கைத்தறிகள், சாயத் தொட்டிகள், ஏந்திரம், உரல், மாவு மில், சாமான்கள் அறை, அடேயப்பா! நாயுடுவே பிரமிக்கத் தக்க விதமாக அனேக சாலைகள் இருப்பதைக் கண்டு வியப்புக் கடலில் மூழ்கினார். மெழுக்குகள் ஒரு புறம் சிதறிக் கிடந்தன. அதைக் கண்டதும் நாயுடு அந்த விடுதிக்குள் சென்று பார்க்கையில் மெழுக்கினால் நிறைய பொம்மைகள் செய்து தத்ரூபம் உயிர் உள்ளது போலான வேலைப் பாடுகளுடன் அமைத்திருந்ததைக் காணக் காண நாயுடுவின் ஆச்சரியம் அபாரமாகக் கரை புரண்டோடியது.

அவைகளையும் உற்றுக் கவனித்ததில் தங்கம் அண்டு கம்பெனி என்ற எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்தன. இன்னும் சில தகரம், இரும்பு சாமான்களைக் கவனித்ததில் "சிங்காரம் அண்டு கோ'

என்று போடப் பட்டிருந்தது. "அடாடா! இப்போதல்லவோ புரிகிறது. இங்கேயே இவர்களே செய்த சாமான்களை வெளியார் செய்ததுபோல இவர்களே பாவனை காட்டிக் கடை வைத்திருக்கிறார்கள். ஆகா! என்ன சூழ்ச்சி! என்ன சாமர்த்தியமான வேலைகள். அடாடாடா! இப்படியா நடக்கிறது?" என்று அங்குள்ள ஒவ்வொன்றையும் கவனித்தார். அபாரமான ஆச்சரியம் பொங்குகிறது. எங்கே பொழுது விடிந்து விடுகிறதோ என்ற பயம் ஒரு புறம் வருத்துகிறது.

மகா யூக மதியுள்ள நாயுடுவுக்கு இவைகளைப் பார்த்த உடனே பெரிய சந்தேகம் ஒன்று உண்டாகியது. அப்படி இருக்கும் சாலைகளின் பக்கலில் அவரை யடைத்திருந்த சிறைபோன்ற விடுதியில் கும்பல் கும்பலாகப் படுத்துச் சிலர் தூங்கிக் கொண்டிருந்தார்கள். "அடேய்! ஊமை தன் தொழிலுக்கு ஆரம்பித்துவிட்டது. வாயற்ற ஜீவனுகையினுல் அதன் பாடு நிம்மதி! நம்மைப்போன்று புலம்பும் கஷ்டமில்லை. அடாடா! இவ்வகண்டாகாரமான பரந்த உலகத்தை அளவிட்டுக் கூறத் திறமற்ற நிலையில் ஈசன் சிருஷ்டித்திருக்க பாவியிலும் மகா கொடும்பாவிகளாகிய நமக்கு மட்டும் இந்த குகையின் சிறைவாஸத்துடன் இறக்கவேண்டிய விதி யமைந்ததேன்? இப் பரந்த உலகின் அற்புதத்தை யனுபவிக்க நமக்கு மட்டும் உவமை இல்லாது செய்துவிட்ட ஈசனின் கருணையற்ற தன்மையை கூறவும் பிடிக்கவில்லை. நம் விஷயத்தில் கடவுளே இல்லை. ராவணன், இரணியன் முதலிய ஜென்ம அரக்கர்களுக்கும் ஒரு முடிவு காலம் இருந்தது. இந்தப் பாவி யரக்கர் கூட்டத்திற்கு விமோசன மில்லையே! ஆகா! எத்தனை வருடமாக இப்படித் தவிப்பது?" என்று அவர்களில் சிலர் பேசிக்கொண்ட வார்த்தைகளை நாயுடு ஊமைச்சியைப் போலவே நடித்து, நின்று கேட்டார்.

அவருடைய சந்தேகங்கள் இன்னும் பன் மடங்கு அதிகரித்தும், சில நிவர்த்தியும் ஆயின. இருள் சூழ்ந்திருப்பதினுல் அக்கம்பியருகில் சென்று. "பே பே" என்று கத்தினுர். அவர்கள் "இன்னும் கதவே திறக்கவில்லையே போடி! மேலண்டைப் பக்கம் குப்பை வாரி

யாயிற்று? எஜமான் அறைகள் பெருக்கியாயிற்று! போ போ!'' என்றார்கள். இங்கிருந்து இன்னொரு பக்கம் சென்றார்.

அங்கு சிலர் ''ஐயோ! வெளியுலகத்தை நாம் பாராமலேயே இறந்துவிடுவோமா! உம். இனி விஷத்தை உண்டவன் இறப்பனோ பிழைப்பனோ என்று சந்தேகங் கொள்வதில் என்ன உபயோகம்? சாவு என்னவோ நிச்சயம். அதுபோலல்லவா நம் கதியும்'' என்றார். இன்னும் சிலர் ''போடா பைத்தியக்காரா! நாம் என்ன சும்மாவா இருந்தோம்! நமக்குத் தெரிந்த பல சூழ்ச்சிகளைத்தான் செய்து பார்த்தோம். இந்த இடத்திற்கே தீ வைத்தோம். அந்தச் செய்கையினால் நம்மவர்களில் நால்வரை நாமாகவே பலி கொடுக்க நேர்ந்தது. இக்கிராதகர்களில் சிலரைக் கொல்ல முயன்றோம். சிலரைக் கொன்றும்விட்டோம். அதிலும் பலனில்லை. இராவணன் தலை துளிர்ப்பது போலத் துளிர்க்கின்றனர். எல்லோரும் தொண்டை கிழிய கத்திப் பார்த்தோம். பேச்சு மூச்சே இல்லை. அதிகமாப் போனால் விரலை வெட்டுகிறான். காதை யறுக்கிறான், இத்தகைய சித்திரவதை செய்கிறான். இனி நாம் என்னதான் செய்ய முடியும்?

வேறு சிலர் ''சீ! மதி கெட்டவர்களே! பஞ்ச தந்திரம் என்பார்கள். நாமோ பத்து தந்திரங்களும் செய்தோம்; பலனில்லை. இனி செய்வதாவது? ஏதோ தொழிலைச் செய்வதும், நல்ல போஜனம் கிடைக்கிறது சாப்பிடுவதும், இம் மலைக்குள்ளேயே உலாவுவதும், நமக்கெனக் கொடுக்கும் பெண்களுடன் சுகமாகக் காலங் கழிப்பதுந்தான் இனி இந்திர போகம். இப்படி சிறையிலடைத்திருக்கிற சமயம் குடி முதல் பீடி, பொடி, மனைவி போகங்கள் வரை எங்கு கிடைக்கும்? ஒரு காரியத்தைப் பார்த்தால் கஷ்டப் படாமல் இதுவே தேவலை என்று தேற வேண்டும். வீணாக தினம் தினம் படுக்கும்போதும், விடிந்து எழுந்திருக்கும்போதும் கைக்கெட்டாத எண்ணத்தைக் கூறி உபயோக மென்ன? பேசாதிருங்கள்.'' என்றார்கள். அதற்குள் ஒருவன் அடேடே! ஒரு வேடிக்கைடா தெரியுமா உங்களுக்கு? எஜமானரில் ஒருவருக்குக் கல்யாணமாண்டா'' என்றான்.

அவ் வார்த்தையைக் கேட்ட மற்றவர்கள் "கல்யாணமா! யாரு சொன்னுடா! பொண்ணு எங்கேயாம்? எப்போது கல்யாண மாம்?" என்று கேட்டார்கள்.

ஒருவன்:—நாளைக்குக் கல்யாணமாம். நமக்கெல்லாம் பெரிய விருந்தாம். பெரிய தடபுடல்தானும். ஒருவரோ டொருவர் பேசிக் கொண்டிருந்தார்கள். அது நேற்று காதில் பட்டது. பொண்ணு ரொம்ப அழகாம். படிக்கராளாம், பாட்ராளாம், எத்தனையோ லக்ஷக் கணக்கிலே பணமிருக்கிறதாம். அவள் தாய் தந்தையர்கள் இறந்து விட்டார்களாம். பொண்ணு பேரு இன்பமணியாம். இந்த பேரைக் கேட்கும்போதே இன்பம் பொங்குகிறதாம்—என்று சொல்வதைக் கேட்ட நாயுடுவுக்குத் திடுக்கிட்டது.

"ஐயோ! இந்த இரண்டொரு தினங்களுக்குள் எத்தனை பெரிய விபரீத காரியத்தில் இறங்கி விட்டார்கள். இன்பமணியை மணப்பதென்று இவர்கள் தீர்மானித்தார்கள் என்றால் வாஸுவும், உத்தமரின் மனைவியும் என்னவானார்கள்? அவர்களையும் இப் பாவிகள் என்னவாவது செய்து விட்டார்களோ! ஐயோ! நாம் இனி தாமதிக்கவே கூடாது. இவர்களிடமே நாம் ரகஸியத்தைக் கூறி இவர்களுடைய உதவியையே நாடி இதற்குத் தீ வைக்க வேண்டும் ......இன்னும் என்ன பேசுகிறார்கள் பார்ப்போம்" என்று நின்றார்.

மீண்டும் அவர்கள் "ஏண்டா! அந்த பொண்ணு இந்த பாதக னைப் பண்ணிக்க சம்மதிப்பாளாடா! இது கூட மோசக் கல்யாண மாகத்தானிருக்கவேண்டும்" என்றார்கள். முதலில் பேசியவன் "ஆமாம். அதற்குத் தடை என்ன இருக்கிறது? அந்த பொண் இவன் முகத்தைக் கூட பார்க்க மாட்டாள். அவள் யாரையோ ஒத் தனை கல்யாணம் செய்து கொள்ள மிகவும் ஆசைப்பட்டிருந்தாளாம். அதை யறிந்து அவனையும், இன்னும் யாரோ ஒரு கோடீச்வரனின் மனைவியாமே, அவளையும் நேத்தே கொண்டுவந்து இங்கு எங்கேயோ அடைத்திருக்கிறார்களாம் என்று சமையல்காரக் குப்பன் சொன் னான். அப்பப்ப! மோசம் செய்வதற்கென்று உடம்பெடுத்துள்ள இவ ர்களிடமா நல்லதை எதிர்பார்க்கலாம்? எத்தனையோ பெண் ரத்தி

னங்கள் இங்கு வந்து சாகவில்லையா! தேயிலை, ரப்பர், காப்பி முதலிய தோட்டங்களுக்கு அனுப்பவில்லையா! கபட சன்யாசிகள், குடிவெறி பிடித்த தடியர்கள், பிரம்மசாரிகள் என்று வேஷம் போடும் நாசக்காரர்கள் முதலியவர்களுக்குப் பெண்களை அக்ரமமாகக் கொடுத்துப் பணம் பெறவில்லையா! அதைப்போல இவளையுங் கொண்டு வந்து என்னவாவது செய்து விடுகிறான். இதானே!

இந்த வார்த்தை நாயுடுவின் மனத்தைப் புண் படுத்தியது. இத்தகைய கொலைக் கூட்டமா—கிராதகக் கூட்டமா—இவ்விடத்தில் இத்தனை காலமாக நம் கண்ணிற்குத் தெரியாமல் இருக்கிறது. சீச்சி! இனி தாமதிக்கக்கூடாது. பொழுதுவிடிந்துவிட்டால் கஷ்டம். வாஸுவையும் ரங்கமணியம்மாளையும் இங்கு உத்தமர் இருப்பதாகக் கூறி மோசமாய் அழைத்துவந்துவிட்டார்கள் என்பது நன்றாக விளங்கிவிட்டது......இருக்கட்டும்...என்று ஒருவாறு தீர்மானித்துக்கொண்டு அவ்விடம் விட்டு வேறு பக்கம் சென்றார். அங்கு அறைக் கதவின் மீதே சாய்ந்துகொண்டு ஒருவர் நிற்பதைத் தன் கையிலுள்ள டார்ச்சு விளக்கினால் பார்த்து மெல்ல அங்கு சென்றார். அங்கு கதவோடு கதவாக வாஸு சாய்ந்தபடியே நிற்கிறான். பக்கத்தில் ரங்கமணியும் நிற்பதைக் கண்டு இவர் மனம் தத்தளித்தது. இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்தார். மெல்ல அருகில் சென்று இப்புறம் அப்புறம் பார்த்தார். ஒருவரையுங் காணவில்லை. சடக்கென்று கதவின் சமீபத்தில் சென்று நின்றதைக் கண்ட உள்ளிருந்த இருவரும் திடுக்கிட்டு இவரையே கவனித்தார்கள்.

நாயுடு வாஸுவைத் தன் கரத்தால் தட்டி யழைத்து மெல்லிய குரலில் "வாஸு! கவலைப்படாதே; உனக்கும் இக் கதி வந்ததை இப்போதே யறிந்தேன். நான் நாயுடு என்பதை உறுதியாய் நம்பு. விவரமாகப் பேசுவதற்குச் சமயமில்லை. நான் இந்த குப்பைக்காரி வேஷத்தில் தான் இன்று வேலை செய்யப்போகிறேன். இதோ இத் துப்பாக்கியை எதற்கும் ரகஸியமாக வைத்துக்கொண்டிருந்து சமயம் நேரும்போது,எவரையும் மார்பில் சுடாதே.காலில் தாக்ஷிண்யமின்றி சுட்டுத்தள்ளு. தோட்டாக்கள் ஆகிவிட்டால் இதோ இவற்றைப் போட்டுக்கொள்ளு. பத்திரம்...அம்மணீ! பயப்படாதீர்கள். எதுவும் நற்காலத்திற்குத் தான் என்று கடவுளை நம்புங்கள்." என்று கூறித் தேற்றிவிட்டு அடுத்த நிமிடமே பின்னும் உள்ள இடங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே குப்பைகள் உள்ள விடத்தில் தலைவிதியை எண்ணிக் குப்பை வாரிக்கொண்டும், கவனித்தவாறும் சென்றார்.

நன்றாக பொழுது விடிந்துவிட்டது. தன்னை எங்கே கண்டு கொள்கிறார்களோ என்ற பயம் வேறு. ஒரு மூலையில் கிடந்த செம் மண்ணை ஒரு கல்லில் வைத்து அரைத்துக்கொண்டே உட்கார்ந் திருந்தார். அந்த அரைத்த மண்ணை தலையிலும் முகத்திலும் கழுத் திலும் நிறைய பூசிக்கொண்டு, "ஊ.ஊ .பே...பே" என்று அதிக மான தலைவலி வந்து தவிப்பது போலப் பறக்கிறார்.

அங்குள்ள சிலர் "ஏ!;ஊமைச்சி! என்ன?" என்று கேட்ட தற்கு தலையை கையால் பிடித்துக் காட்டி"தலைவலி பொறுக்க முடிய வில்லை. என்னால் ஒரு வேலையும் செய்ய முடியாது. ஜொரம் வரும் போல விருக்கிறது." என்று சமிக்ஞை செய்து காட்டிவிட்டு அங்கு சற்று இருட்டான ஓர் இடத்திற்குச் சென்று நன்றாக முக்காடிட் டுக்கொண்டு படுத்துவிட்டார்.

வேலைக்காரர்களின் மேஸ்திரி இந்த ஊமை செய்ததைப் பார்த்து உண்மை என்றே எண்ணி அருகில் வராமலேயே "அடேய்! ஊமச்சிக்கு ஜுரமாம். படுத்திருக்கட்டும்; தொந்திரவு செய்யவேண்டாம். இந்த வேலையை வேறு யாராவது செய்யட்டும்" என்று தூரவிருந்து உத்திரவிட்டுவிட்டான். ஊ...ஆ...என்று பெருத்த ஆர்ப்பாட்டம் செய்தபடி நாயுடு ஒருவரும் இல்லாமலிருக் கையில் முட்டாக்கை எடுத்துப் பார்ப்பதும், யாரேனும் சந்தடி செய்தால் இழுத்துப் போர்த்துக் கொள்வதும் இவ்விதமான நடிப் பில் படுத்திருக்கிறார். மனத்தில் எண்ணாததும் எண்ணி யோசனை அலையில் தத்தளிக்கிறார்.

வாஸுவுக்கும் ரங்கமணிக்கும் நாயுடு கூறிச் சென்ற சற்றும் எதிர்பாராத இத் தைரிய மொழியைக் கேட்டதும் பிராணன் போகின்றவனுக்கு ஜீவாம்ருதம் கொடுத்து உயிர்ப்பிக்கச் செய்தது போல விருந்தது. ரங்கமணிக்கு மட்டும் இன்னமும் சற்று சந்தே கந்தான். "வாஸு! இந்த காரியத்தையும் நாயுடுவென்று பொய்யாக நம்மை ஏமாற்றக் கூறியிருக்கலாமோ!" என்று கேட்டாள்.

வாஸு நாயுடுவை நன்றாகப் பார்த்திருப்பதால் அவருடைய வார்த்தை மிகவும் மெல்ல விருப்பினும் நாயுடுதான் என்பது மட்டும் நன்கு தெரிந்துகொண்டான். ஆகையினால் ரங்கமணிக்கு "இது பொய்யான கதையல்ல. உண்மை நாயுடுதான். தாங்கள் சற்றும் பயப்படவேண்டாம். கடவுளின் கடைக்கண் நோக்கு ஏற்பட்டுவிட்ட தால்தான் நாயுடு இங்கு வந்து விட்டார். வந்த காரியத்தின்படி வேஷமும் போட்டுவிட்டார். தாங்கள் இனி தைரியமா யிருங்கள்" என்று கூறினான்.

அந்த துப்பாக்கியை வாஸு வெகு ஜாக்ரதையாக வைத்துக் கொண்டான். "எப்போது என்ன செய்தி வரும்? என்ன விஷயம் காதில் படும்?" என்றே அவர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருந் தார்கள். ஊமைச்சியாகிய நாயுடுவும் "உண்மையான ஊமச்சி என்ன செய்கிறதோ! மயக்கம் தெளிந்ததோ! இல்லையோ! அந்த ரகஸிய குட்டு வெளியாகிவிட்டால் என் தலைக்கு மீண்டும் வந்துவிடுமே" என்று எண்ணியவராய் மெல்ல மூக்காடுடன் எழுந்து முன்பு தன்னை அடைத்திருந்த இடத்திற்குச் சென்றார். அந்த ஊமை இன்னமும் படுத்துக்கொண்டே இருக்கிறது. அவ்வறையின் கதவு மட்டும்தான் காலையில் திறந்து. வெறுமனே சாற்றப்பட்டிருந்தது ஒருவருக்கும் தெரியாதாகையினால் அப்படியே இருந்தது.

அதைக் கண்டு அவர் மெல்ல அறைக்குள் நுழைந்தார். ஒரு தட்டில் ரொட்டியும் பலகாரமும் இருந்தன. அந்த ரொட்டி பார்ப் பதற்கு மிகவும் அழகாயிருந்ததுடன் அதன் மேல் ஏதோ வேலை செய்த பூ முத்திரை இருப்பதைக் கண்டு ஒருவிதமான சந்தேகத் துடன் அதை எடுத்துப் பிட்டார். நாயுடு வியப்புற்று மகிழும்படி இன்பமணிக்குக் கிடைத்ததுபோல கிராமபோன் ஊசிப் பெட்டி அதனுள் இருந்தது. அதை அவசரமாக எடுத்து மடியில் சொரு கிக்கொண்டு மற்றவைகளையும் பிட்டுப் பார்த்தார். அவைகளில் ஒன்றையுங் காணவில்லை. தான் இங்கிருந்து இதைப் பார்க்கக் கூடாதென்று எண்ணி அபாரமான சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்தவராய் மெல்ல கதவைத் திறந்துகொண்டு வேறொரு இருட்டான இடத்தில் போய் முன்போல முக்காடுடன் படுத்துக் கொண்டார்.

நாற்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணமாகவே அந்த சிறிய ஊசிப் பெட்டியைத் திறந்து பார்த்தார். அதில் ஒரு காகித மடிப்பு இருந்தது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியுடன் பிரித்தார். அதில் முதல் வரியில் என் அன்பு மிக்க தந்தையே! என்ற வாக்கியத்தைக் கண்ட உடனே அவரை யறியாத ஆநந்தத்தினால் தேகம் குலுங்கி ஒரு முழம் தூக்கிப்போட்டது. அது தன் அருந்தவப் புதல்வி அம்புஜா எழுதிய கடிதந்தான் என்று விளங்கியதால் அதை முற்றி லும் படிக்க வாரம்பித்தார்.

"என் அன்பு மிக்க தந்தையே!

ஒரு முக்கிய விஷயம். தாங்கள் சென்ற காருக்குப் பின்னு லிருந்து பின்தொடர்ந்தே நான் நமது பேபி காரில் ஒரு வியாபாரியைப் போல உடையணிந்து வந்து இக்

குகையைக் கண்டுபிடித்துவிட்டேன். இவ்விடத்தில் முக்கிய மான பல வேலைகளைச் செய்து முடித்திருக்கிறேன். முக்கால் வாசியும் ஜெயமாகிவிட்டது. தாங்கள் அங்கு சும்மா இருக்க மாட்டீர்களென்றும் இதுவரையில் எத்தனையோ விஷயங்களைக் கண்டுபிடித்திருப்பீர்கள். என்றும் எனக்குத் தெரியும். உத்தம ரின் மனைவியையும், வாஸுதேவனையுங் கூட அக்குகைக்குக் கபடமாக நீங்கள் அழைப்பதாக அழைத்துச் சென்றிருக்கி றார்கள். அதையும் இதற்குள் நீங்கள் பார்த்திருக்கலாம்.

தந்தையே! மற்றொரு விஷயம். நீங்கள் இங்கு எந்தெந்த ரகஸியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அம்மட்டுடன் தெரிந்து கொண்டு நீங்கள் வாளா விருந்து விடுங்கள். இவர்க ளைச் சுடவோ, பயமுறுத்தவோ ஒன்றும் செய்யவேண்டாம். வேலை கெட்டு விடும். நான் ஓர் பெரிய வலையை இங்கு வீசி யிருக்கிறேன். அதில் கட்டாயம் எல்லா மீன்களும் ஏக காலத் தில் விழுந்துவிடும். ஆகையினால் தனித்துப் பிடிக்கவேண் டாம். விவரம் கூடிய சீக்கிரம் அறியலாம். தாங்கள் மாறு வேடத்திலிருப்பீராயின் அதை மாற்றிவிடுங்கள். ஒருகால் அவ காசமின்றி பிடிபட்டுவிட்டாலும் பாதகமில்லை.

இங்ஙனம்

உங்கள் அடிமைப் புதல்வி

அம்புஜவல்லி.''

அதைப் படித்ததும் அம்புஜத்தின் அபாரமான சக்தியைக் கொண்டாடி மனத்திற்குள் வியப்புற்று கொந்தளித்தார். தான் உடனே வேஷத்தைக் களைவதா! வேண்டாமா! வென்பதை யோசித் தார். முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியதைத் தெரிந்தா யிற்று. நாம் தூரவிருந்து நடப்பதைப் பார்ப்போம் என்று எண்ணி அக்கடிதப் பெட்டியை மடியில் வைத்துக் கொண்டார். அந்த வேஷத்துடன் மெல்ல இப்படியும் அப்படியும் பார்த்தபடியே முக்காடை எடுக்காமல் அங்கு மரங்கள் அடர்ந்த நடுமத்தியமான இடத்திற்கு வந்து பார்த்தார். அது சரியான் இடமென்று தோன் றியதால் அந்த அடர்ந்த மரத்தில் ஒன்றில் ஏறி நிறைய கிளை யும் இலையுமாக மறைத்திருக்கும் இடத்தில் வெகு ஜாக்கிரதையாக உட்கார்ந்தார். அங்கிருந்தபடியே தன் முகத்திலுள்ள செம்மண் பத்தைக் கலைத்துவிட்டு டோபாவையும் எடுத்து விட்டு புடவையை யும் ஒரு கிளையில் மறைத்துவிட்டுத் தன் உள் நிஜாருடன் நன்றாக அமர்ந்துவிட்டார். அங்கிருந்து பார்த்தால் நடக்கும் செய்திகள்

நன்கு தெரியுமாதலால் அவைகளையே கவனமாக பார்த்துக்கொண் டிருந்தார்.

இங்குள்ள எல்லா வேலையாட்களும் பரபரப்பாக ஓடி யாடி வேலை செய்யக் கிளம்பினார்கள். "அடேய்! எஜமானுக்கு இன்னிக்கி தாண்டா கல்யாணமாம். இன்னிக்கே நமக்குக் கொண்டாட் டண்டா! அந்த பக்கமெல்லாம் ஒரே குப்பை. இந்த ஊமைக்கு இப் போது திடீரென்று கேடு வந்துவிட்டதே! இன்று கல்யாணம்; எல்லா எஜமான்களும் ஒன்று கூடும் இடம். இங்கு இப்படி இருந் தால் என்ன நினைப்பார்கள் என்று பேசிக்கொண்டே, அடேய் ஊமை யை இழுத்துக்கொண்டு வாடா!" என்றான் ஒருவன்.

இவர்கள் ஊமையைத் தேடித் தேடிப் பார்க்கிறார்கள். அதைக் காணவில்லை. இதற்குள் நாயுடு இருந்த உள்ளே தள்ளப்பட்ட ஊமை க்கு மயக்கம் தெளிந்துவிட்டது. திடீரென்று தன் ஆண் உடையைப் பார்த்துப் பார்த்து அதற்கு ஒன்றுமே தோன்றவில்லை. நாயுடு இருக்கிறாரோ வென்று சுற்று முற்றும் பார்த்தது. அதற்கு ஒருவித மான பயமும் திகிலும் எடுத்துக்கொண்டது. தனக்கேதோ பெருத்த ஆபத்து நேர்ந்துவிட்டதாகவே எண்ணிவிட்டது. வெகு விரைவில் கதவருகில் வந்து 'பே பே' என்று பெரிதாகக் கத்தி சத்த மிட்டது.

இந்த கூச்சலைக் கேட்ட எல்லோரும் 'ஊமை இதோ! இதோ!' என்று அவ்விடம் வந்து பார்க்கையில் ஆண் உடையில் சற்றும் அடையாளமே தெரியாமல் நிற்கிறதைக் கண்ட எல்லோரும் பிரமித்துப் போய் நாயுடுதான் இவ்விதம் வேஷம் போட்டுக் கத்து கிறார் என்று தீர்மானித்துவிட்டார்கள். பிறகு நன்றாகக் கவனித் துப் பார்க்கையில் இந்த ஊமைக்கே இந்த வேஷம் போடப்பட் டிருப்பதை யறிந்து "ஐயோ! மோசம்! மோசம்! நாயுடு எப்படியோ தப்பித்துவிட்டான். நாயுடுவைக் காணவில்லை. இந்த ஊமைக்கு மணி கணக்கு தெரியாமல் நடு நிசியிலேயே குப்பை வார வந்து விட்டது. இதை வைத்துக்கொண்டே அவன் ஏமாற்றித் தன் வேஷத்தை இதற்கு மாட்டி இதன் வேஷத்தை அவன் போட்டுக் கொண்டு தன்னை யாரும் கண்டுகொள்ளாதிருக்கும் பொருட்டு முகத்தில் பத்தையும் போட்டுக்கொண்டு தனக்கு உடம்பு சரியில்லை என்று ஜாலம் செய்திருக்கிறான். மூலைக்கொருவராகத் தேடுங்கள். அந்தப் பயல் இந்த குகையை விட்டு வெளியேற என்னவோ முடி யாது. ஆகையினால் இங்குதா னிருக்கவேண்டும். தேடிப் பிடியுங்கள்" என்ற உத்திரவும் அட்டகாஸமும் அண்டத்தையளாவுகின்றன.

மூலைக்கு மூலை ஜனங்கள் தாறுமாறாக ஓடித் தேடுகிறார்கள். எங்கும் காணவில்லை. இதே கலவரத்தில் எங்கும் தடபுடலாக விருக்கையில் குகையின் பெரிய கதவு திறக்கப்பட்டது. எஜமானன் உள்பட அனேகம் பேர்கள் மோட்டார்களில் வந்து இறங்கினார்கள். அடுத்த நிமிடம் பேண்டும், மேளமும் அண்டத்தையளாவ திடீர் என்று முழங்க வாரம்பித்தன. அன்று எஜமானுக்கு விவாகம் நடக்கும் என்று இங்குள்ள ஜனங்களெல்லோருக்கும் தெரியாதாகையினால் பேராச்சரியமாகிவிட்டது.

இத்தனை தடபுடலையும் நாயுடு மரத்தின் மீது இருந்தபடியே கவனித்து நகைத்துக்கொண்டே இருக்கையில் மேள சப்தம் கேட்டதும், நாயுடுவுக்கு அடங்கா வியப்பு உண்டாகியது. "இன்று காலையில் அவர்கள் கூறியது இன்றே நடக்கும் போல விருக்கிறதே!. ஐயோ! இன்பமணியையுங் கொண்டுவந்துவிட்டார்களா? அம்புஜம் இச்சமயம் என்ன செய்கிறாளோ! தெரியவில்லையே!" என்ற கவலை வந்துவிட்டது. வெகு கூர்மையாக கவனித்துக் கொண்டிருந்தார். தான் எழுந்து கும்பலில் புகுந்துவிடலாமா என்று நினைக்கிறார். அம்புஜத்தின் கடிதம் நினைவிற்கு வந்தது. என்னதான் நடக்கிறதோ பார்க்கலாம் என்று உட்கார்ந்திருந்தார்.

சமையல் வேலைகள் ஒரு புறம் பெரிய ஆடம்பரமாகத் தொடங்கிவிட்டன. ஜனங்களெல்லோரும் ஒரு கூட்டமாகக் கூடிச் செல்கிறார்கள். மரத்தின் மீதிருந்த நாயுடு இப்போது மெல்ல இறங்கி சந்தடியில் உள்ளே நுழைந்து விடவேண்டும் என்று எண்ணியவாறு சமயம் பார்த்துக் கீழே இறங்கித் தன் கண் முன்பு தென்பட்ட அறையில் புகுந்தார். அது வென்னீர் உள்ளாக விருப்பது கண்டு அங்கு ஓர் மூலையில் பதுங்கி கதவைச் சாத்திக்கொண்டார்.

வெளியிலிருந்து ஒரு குரல் "யாரது உள்ளே குளிப்பது! நாகம்மாளா! என்னேரண்டீ குளிப்பே! சீக்கிரம் ஆகட்டும்." என்றது. இதைக் கேட்ட நாயுடு, "இதோ ஆய்போச்சு. எனக்குப் புடவைக் கொண்டுவா! எடுத்துவர மறந்துவிட்டேன். கல்யாண தடபுடலில் கும்பலாக இருக்கிறது" என்று தந்திரமாகக் கூறினார். தடிமுண்டே! ஒனக்கு நான் வேலைக்காரனா! புடவை கூடக் கொண்டுவரணம் போலிருக்கிறது......உம். என்னருமை நாகமோன்னா! கொண்டுவரேன்." என்று கூறியவாறு சென்று ஒரு புடவையைக் கதவின் வழியாக உள்ளே நீட்டினான்.

நாயுடு அதை வாங்கி ஒழுங்காக உடுத்திக்கொண்டு அசல்

ஒரு பெண்பிள்ளையைப்போல அலங்கரித்துக்கொண்டு பெரிய குங்குமப் பொட்டுடன் வெளியில் வந்து தடதடவென்று கல்யாணப் பந்தலுக்குச் சென்றார். அங்கு சில ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள். நாட்டிய மாதர்கள் சிலரும் அவர்களுடன் தாய்க் கிழவியும் உட்கார்ந்திருந்ததை நாயுடு பார்த்தார். மெல்ல அவர்கள் கோஷ்டியில் போய் உட்கார்ந்தார். பார்ப்பவர்கள் தன்னைச் சந்தேகிக்காமல் இந்த செட்டைச் சேர்ந்தவர்கள் என்று நினைத்துக்கொள்ளட்டும் என்று எண்ணி அந்த தாய்க் கிழவியிடம் பேசவும் ஆரம்பித்தார். வெத்திலைப்பாக்கும் வாங்கிப் போட்டுக்கொண்டு "நானும் தாசி குலந்தான். ஆதியில் எத்தனையோ அருமையாக பரத நாட்டியம் ஆடினவள்தான். உடம்புக்கு சிக்கு வந்துவிட்டதால் இப்போது ஒன்றும் முடியாது போய்விட்டது" என்று கூறினார்.

இவர் கூறுவது முற்றும் உண்மை என்றே நம்பிய தாய்க் கிழவி சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தாள். நாயுடு அந்தக் கூட்டத்தில் உட்கார்ந்தபடியே விவாகத்தின் வைபவங்களை எல்லாம் வெகு கூர்மையாகக் கவனித்தவாறு தன் ஜனங்கள் எங்கேனும் வந்திருக்கிறார்களா வென்பதை ஆராய்ச்சி செய்துகொண்டே இருக்கிறார். இன்பமணியின் தவிப்பையும் அவள் முகத்தில் காட்டும் வேதனைகளையும் கண்ட நாயுடுவுக்கு மனங் கலங்குகிறது. எனினும் தான் அங்கிருப்பதால் சற்று தைரியமாயுமிருக்கிறார்.

நாம் முன்னதிகாரத்தில் "இன்பமணி மணவறையில் மூர்ச்சித்துவிட்டாள்" என்று தெரிவித்தோமல்லவா! அவ்வாறு விழுந்ததும் எல்லோரும் திடுக்கிட்டார்கள். தண்ணீர் கொணர்ந்து மூர்ச்சை தெளிய வைத்தார்கள். இதற்குள் ஒருவன் "அடேய்! இந்த அற்புதமான கல்யாண வைபவத்தைக் காண அந்த வாஸுதேவனை இழுத்துக் கொண்டுவந்து இங்கு நிக்கவையுங்கடா! இருவரும் தள்ளினார்களே! இப்போது என்ன செய்கிறார்கள் பார்க்கலாம்" என்று அகம்பாவத்துடன் கூறினான்.

இம்மொழி இன்பமணியின் இதயத்தில் ஈட்டிபோலப் பாய்ந்தது. "ஹா! நான் சர்வ முட்டாளாகி என் தலைக்கே நான் தீங்கு தேடிக்கொண்டு விட்டேன். அந்த ரொட்டிக் கடிதம் முற்றிலும் சுத்த மோசம்; சுத்தமோசம். ஐயோ! நாயுடு காருவுங்கூட மகா பாவியாகிய என் விஷயத்தில் கை விட்டுவிட்டாரே! ஹா! ஈசா! என் செய்வேன்?" என்று தத்தளிக்கிறாள். தான் சற்றேனும் கலபை செய்யாது இணங்கியவள் போலவே வீற்றிருந்து தன்னுருயிர்க் காதலன் வந்ததும் அவரைக் கண்டபின் பெரிய சத்தமிட்டுக் கலகம் செய்யலாம்" என்று எண்ணித் தலை|குனிந்தாள்.

வாஸுவும் ரங்கமணியம்மாளும் நாயுடு அவர்களைச் சந்தித்துப் பேசியதிலிருந்து அடங்கா மகிழ்ச்சி கொண்டிருந்து எப்போது சமயம் வரும் வரும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் பிரமாதமாக பாண்டும் மேளமும் முழங்கியது காதில் கேட்டதும் "இதென்ன இது. திடீரென்று பாண்டும், மேளமும் கேட்கிறதே என்ன விசேஷம்? இந்த காட்டில் நடக்கும்?'' என்று குழம்பினர்கள். ஆனல் நாயுடு இதன் உள்ளே இருப்பதால் சற்று தைரியம் தோன்றியது.

அச்சமயம் இரண்டு தடியர்கள் அங்கு வந்து "ஐயா! வாஸு தேவரே! உமது அருமைக் காதலிக்கும் என் எஜமானருக்கும் விவாகம் வெகு வைபவமாக நடக்கிறது. நீங்கள் அதைப் பார்த்துச் சந்தோஷப்பட வாருங்கள். எஜமான் கூப்பிடுகிருர்'' என்று கூறிய மொழிகள் வாஸுவின் காதில் கொடிய செந்தணலை அள்ளி இரைத்தது போல விழுந்தன. அதே நிமிடம் சோலைக்குள் மறைந்திருந்த நாயுடு அம் மொழியைக் கேட்டுக்கொண்டே இவர்கள் பின்னல் நின்று சைகையினல் "சுடாதே! அங்கு வா'' என்று ஜாடை காட்டினர்.

இதை யறிந்த வாஸு தன் விசனத்தை யடக்கிக்கொண்டு "ஆகா! உன் எஜமானருக்கா விவாகம்! மெத்த சந்தோஷம்'' என்று கூறிக்கொண்டே அவர்களுடன் ரங்கமணியை அழைத்துக்கொண்டு வந்தான். பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டுள்ள மணவறையில் மணமகளை உட்கார்ந்திருக்கும் மனிதனைப் பார்த்ததும் இவன் சந்தேகம் முற்றும் நிவர்த்தியாகிவிட்டது. அதாவது அவன் மரப் பட்டையிலிருந்து கண்டுபிடித்து எழுதியபடி மங்களங் கம்பெனி செட்டியார்—அதாவது தான் வேலையாக இருந்த தோட்டத்து எஜமானனுகிய செட்டியார்—அங்கு வீற்றிருப்பதைக் கண்டதும் நெருப்பு மலை மீது நிற்பவன் போலத் தோன்றி வதைக்கின்றது. இவனைக் கண்ட உடனே செட்டியார் பெரிதாக நகைத்து "வாஸு! உட்காரு'' என்று ஏளனமாகக் கூறினர்.

இன்பமணி தன் கணவனையும், தாயாரையுங் கண்ட உடனே பத்து யானையின் பலத்தை வரப்பெற்றவளாய் சடக்கென்று எவரும் எதிர் பார்க்கா வண்ணம் எழுந்து ஓடித் தன் தாயாரைக் கட்டிக் கொண்டு "அம்மா! அம்மா! வென்று சிறு குழந்தையைப் போலக் கதறினள். ரங்கமணியும் மெய்ம்மறந்து நின்றுள். இன்பமணி வாஸுவின் இருகால்களையும் பிடித்துக்கொண்டு "நாதா! என் ப்ராணநாதா! என்னை இப் பேராபத்திலிருந்து காப்பாற்ற

வேண்டும்" என்று முறையிட்டு அவனை இறுக்கிக் கட்டிக்கொண்டாள்.

அதே சமயம் "பிடித்து இழுத்துத் தள்ளடா! உம். தள்ளு". என்ற குரல் கேட்டதும் வாஸு தாக்ஷணியம் பாராமல் முதலில் மணமகனின் காலில் வெகு தைரியமாயும், அவர்கள் சற்றும் எதிர்பாராவிதமாயும் சுட்டான். சாதாரணமாக பாண்டுக்காரர்கள் செட்டில் மொத்தம் வாசிப்பவர்கள் 10 பேர்கள் இருப்பார்கள்; ஆனால் அங்கு வந்துள்ள இரண்டு ஜதைகள் 20 பேர்களாக புதிய முறையில் வாசிக்கும் ஜதையாக இருந்தன. அந்த பாண்டுக்காரர்களும் நாகஸ்வரக்காரர்களும் குபீர் என்று எழுந்து அங்கிருந்த பலரை டப் டப் என்று ஏக காலத்தில் பல வெடிகளின் சத்தம் ஆகாயத்தை யளாவச் சுட்டுத் தள்ளியவாறு தம்தம் பாண்டு உடைகளைக் களைந்து எறிந்துவிட்டார்கள்.

பாண்டு செட்டில் தாளக்காரனாகவிருந்த அம்புஜம் அந்த உடையை நீக்கி வெகு காம்பீரமாக தைரிய தேவதை போலவும், வீரமங்கைக்கரசி போலவும் துப்பாக்கியுடன் ப்ரஸன்னமாகி அங்கு நின்ற நாயுடுவை நோக்கி, "தந்தையே! இனி இச் சேலை எதற்கு? களைந்து எறியுங்கள்; வாருங்கள் நாயுடுவாக!" என்று கூறினாள்.

தன்னபிமானப் புதல்வி பாண்டு செட்டில் வந்திருக்கக்கூடும் என்று நாயுடுவே சற்றும் நினைக்கவில்லையாதலால் மகிழ்ச்சியினால் மெய்ம்மறந்து அம்புஜத்தைத் தடவிக் கொடுத்து தன்னுடையைக் களைந்து எறிந்துவிட்டு துப்பாக்கியை ஏந்தி நின்று சுட்டு வீழ்த்தினார். ஆகா! இன்பமணியின் சந்தோஷத்தைக் கூறவேண்டுமா! நாயுடுவின் காலில் விழுந்து பிடித்துக்கொண்டாள். அம்புஜத்தைக் கட்டியணைத்தாள்.

182969

அங்கு வந்த பாண்டுக்காரர்களும் நாகஸ்வரக்காரர்களும் சிலரைத் தவிர மற்ற எல்லோரும் கையில் வாத்தியங்களை வைத்து பும் பும் என்று ஊதிக்கொண்டு சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்த போலீஸ் உத்யோகஸ்தர்களாதலால் அவர்கள் தம்தம் உடைகளுடன் விளங்கியதைக் கண்ட எதிரிகள் விலவிலத்துப்போய் விட்டார்கள். எல்லோரையும் காலிலேயே சுட்டு எழுந்திருக்கவொட்டாது தள்ளிவிட்டதால் அத்தனை பேரும் தத்தளிக்கிறார்கள்.

அவர்களில் சிலர் "ஐயா! எங்களைச் சுடாதீர்கள். இந்த பாவி கூட்டத்தில் சேர்ந்தவர்களல்ல. இவர்களாகக் கொண்டுவந்து அடைக்கப்பட்டவர்கள். எங்களைக் காப்பாற்றுங்கள். பிரபுக்களே!



இந்த சமயத்தைத்தான் நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். எங்களைக் காப்பாற்றுங்கள்.'' என்று காலில் விழுந்தார்கள். நாயுடு அவர்களை எல்லாம் ஒரு தனி யறையில் போகச் செய்து கதவைப் பூட்டிவிட்டு ''நீங்கள் இருங்கள். பிறகு பேசுகிறேன்.'' என்று கூறினர்.

இன்னும் சிலரோ இருந்த தடபுடலைக் கண்டு பிரமித்துப் போய் மூலை மூலையாகச் சென்று பதுங்கத் தொடங்கினர்கள். மண வறை எல்லாம் பிணவறை போலாகிவிட்டது. சுட்டு வீழ்த்தப்பட்டவர்கள் தவிர மறைந்துவிட்ட சிலர் உள்ளே ஓடி துப்பாக்கியுடன் இவர்களைச் சுடுவதற்கு வந்து விட்டார்கள். இதை ஜாடையா லறிந்த அம்புஜம் அவ்விடத்திலுள்ள ஒரு மூலையில் நின்றபடி இவர்கள் வரும்போது நீண்ட கழி கொண்டு துப்பாக்கியை தட்டித் தட்டிக் கீழே போட்டு விட்டாள். நாயுடு அவைகளை எடுத்துக் கொண்டு அவர்களையே சுட்டு வீழ்த்தி விட்டார். அத்தனை பெயரும் இஞ்சி தின்ற குரங்குபோல விழித்துக்கொண்டு தீராத துக்கமும், அடங்காத ஆத்திரமும் கொதித்தெழுந்தவாறு திணறி, நாயுடுவை விரைக்க விரைக்கப் பார்க்கிறார்கள். கண்கள் நெருப்புப் பொறி பறக்கின்றன.

நாயுடு அவர்களை நோக்கி ''பெரிய மனிதர்களே! ஏன் இப் போது உங்கள் சாமியார் வந்து உங்களுக்கு உதவி புரியவில்லையா! மந்திர விபூதி கொடுக்கவில்லையா! கூப்பிடுங்கள்'' என்று புண்ணில் கோலிடுவதுபோலக் கூறிய இம் மொழியைக் கேட்டு நாயுடுவை அப்படியே விழுங்கி விடுபவர்போலப் பார்க்கிறார்கள். வினையை விதைத்தால் வினைப் பழமன்றோ பழுக்கும். தீங்கனி கிடைக்குமா?

## 18-வது அதிகாரம்.

## விடுபட்ட சிடுக்கு—முடிவில்லா இன்பம்

உ
கோ:கு:தெ

நாயுடுவுக்குத் தன் சிஷ்யையும், அபிமான புத்திரியுமான அம்புஜத்தின் நுண்ணறிவையும், சாமார்த்தியமாக இவ்விஷயத்தில் வேலை செய்துள்ள அதிசயத்தையும் கண்டு மனம் பூரித்து விட்டது. ''என் செல்வீ! மற்ற சகோதரர்களே! இனி நிற்க வேண்டாம். இப்படி உட்கார்ந்து சிரமப் பரிகாரம் செய்து கொள்ளுங்கள். இனிமேல் நடக்கும்

வேலையைச் சற்று நிதானமாகச் செய்யலாம்'' என்றார். இதற்குள் இன்னும் இரண்டு போலீஸ் வான்கள் நிறைய சிப்பாய்கள் வந்து சேர்ந்தார்கள். வாஸுவும், இன்பமணியும் நாயுடுவின் காலில் விழுந்து இன்னது பேசுவதென்பது தெரியாமல் திகைத்து விட்டார்கள்.

நாயுடு அவர்களை எழுந்திருக்கச் செய்து "அப்பா! வாஸு! அம்மணி! கடவுளை வணங்குங்கள். எல்லாம் அவன் செயல். அவனன்றி உலகில் எக்காரியந்தான் நடக்கும். இப்போது காரியத்தில் வெற்றி கண்டு பிடித்தவள் என் செல்வி அம்புஜாவேதான். சகல புகழ் மாலைகளையும் அவளுக்கே சூட்டுங்கள். அவளுடைய திறமை பிரகாசிப்பதற்காகவும், இங்கு உள்ளுக்குள்ளே என்ன விருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்கும் பொருட்டும் நான் முதலில் உள்ளே புகுந்தேன். இவ்விடத்தில் உள்ள பல உளவுகளைக் கண்டு பிடித்து விட்டேன்'' என்று இவர் கூறுகையில்,

ரங்கமணி கண்ணீர் பெருக நாயுடுவின் காலில் விழுந்து வணங்கி "ஐயனே! வெற்றிக்கு இன்னும் முற்றுப் புள்ளி விழவில்லையே! என் ப்ராணநாதரைத் தாங்கள் கண்டு பிடித்துவிட்டீர்களா! என் ஜீவாதாரத்தின் விஷயம் என்னவாயது?'' என்று மிகவும் வணக்கத்துடன் கேட்டாள்.

இந்த பரிதாபகரமான கேள்வி இவர்கள் மனத்தை உருக்கியது. அம்புஜம் ரங்கமணியின் கரத்தைப் பற்றிக் கொண்டு "உத்தமத் தாயே! நான் அதை மறக்கவில்லை. ஒரே விஷயங்கள் பல பாகமாக சிதறிக் கிடப்பதாலேயே ஜெயமும் சிதறி விடாது. ஜெயமென்பது அவ்விஷயங்கள் எல்லாவற்றிற்கும் ஒன்றல்லவா! உங்களுக்கு ஒரு குறைவுமில்லை. கூடிய சீக்கிரத்திலேயே உங்கள் பிராணபதியைக் காண்பீர்கள். ஆநந்த மெய்துவீர்கள்'' என்று கூறி யாரையோ பார்த்துக் கண் ஜாடை செய்தாள்.

இதுபரியந்தம் நாட்டியக்காரப் பெண்களுக்குத் தாய்க் கிழவியாக உட்கார்ந்திருந்த பெரியம்மாள் எழுந்து வந்து ரங்கமணியைத் தழுவிக் கொண்டாள். இந்த செய்கை ரங்கமணிக்கு மிகவும் அருவருப்பாக விருந்ததால் "அம்மா! தாங்கள் யார்? என்னை எதற்குத் தழுவுகிறீர்கள்?'' என்று கூறி விலகிக் கொண்டாள். இச் செய்கை நாயுடுவுக்கும் மிக்க ஆச்சரியமா யிருந்தது. ஏன் இப்படிச் செய்கிறாள்'' என்று எதிர்பார்த்து அம்புஜத்தின் முகத்தைப் பார்த்தார்.

அதே சமயம் சதிர் ஆடுவதற்காக வெகு திறமையான அலங்காரத்துடன் வந்திருந்த ஒரு அம்மாள் வெகு ஆவலோடு ஓடிவந்து

"என் கண்மணீ! வாஸுதேவா! என் ஆவிக்கமுதே! உன்னை உயிருடன் பார்க்க எனக்கு இம்மகாலக்ஷ்மிதான் அருள் புரிந்தாள். இந்த அம்மாள் சாமானிய பெண்மணி யல்ல. சக்தி ச்வரூபி, புத்தியில் கலைவாணியின் அம்சம், தைரிய லக்ஷ்மியின் திருவருள் பெற்ற வீர மங்கை" என்று கூறிக்கொண்டே ஆநந்தக் கண்ணீர் விட்டாள்; தன்னுடைய அலங்காரங்களைக் களைந்தெறிந்தாள். வாஸு ப்ரமித்துத் தம்பம் போல நின்றாள்.

தாய்க் கிழவியாக வந்த அம்மாள் பெண்வேடத்தைக் களைந்துவிட்டுத் தியாக மூர்த்தியாகிய உத்தமராகச் சேவை சாதித்து ரங்கமணியையும் இன்பமணியையும் இரு கைகளாலும் சேர்த்துத் தழுவிக் கொண்டு "என் ஆத்ம நிலையங்களே! என்னைப் பிடித்த பீடை தொலைந்தது. இம்மகானுபாவனே நமது குல தேவதை எனலாம். "ரங்கமணீ! ப்ரியே! வருந்தாதே! ஜெயத்திற்கு முற்றுப் புள்ளி விழுந்து விட்டது. ஆகா! என்ன அன்பு. உங்கள் தேகம் துரும்பென மெலிந்து விட்டதே!" என்று விசனித்தவாறு இருவரையும் தழுவி நின்றார்.

நாயுடுவுக்கு உண்டான ஆச்சரியத்திற்கும், அவமானத்திற்கும் அளவே இல்லை. நானே உத்தமரை இன்னாரென்று அறிந்து கொள்ளாமல் உண்மையில் நாட்டியக் கூட்டத்தின் தாய்க் கிழவி என்றல்லவோ ஏமாந்து விட்டேன். "அடாடா! அம்புஜம் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யை நீதான்" இந்த மகானுபாவன் வேஷத்தில் மறைந்திருப்பதை நான் சற்றும் கவனிக்காமல் இவருடனேயே பேசிக்கொண்டு வெத்திலை பாக்கு போட்டுக்கொண்டு நான் என்னை அவர்களறியாதிருக்கவன்றோ வழி தேடினேன். உத்தமரே! என்னையே நன்றாக ஏமாற்றினீர்" என்றார்.

உத்தமரின்மீது சாய்ந்த இரு பேதையர்களும் தன்னிலையையே அழிந்தார்கள். உத்தமரை விடவே இல்லை. அவர் நாயுடுவை நோக்கி "ஐயா! நீர் ஏமாந்ததைப் போல நானும் உங்களை எதிரிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று உள்ளுக்குள்ளே நினைத்து பயந்துகொண்டே இருந்தேன். நீங்கள் வேண்டுமென்று என்னைத் தெரிந்துகொண்டுதான் என்னிடம் வந்து பேசுவதுபோல பாவனை காட்டி என்ன செய்து விடுவீர்களோ என்று நடுங்கிவிட்டேன். இரண்டும் சரியாகிவிட்டது. இதோ இந்த மகானுபாவன் தான் என்னுயிரைக் காப்பாற்றினார்." என்று மற்றொரு நாட்டியப் பெண்மணியைச் சுட்டிக் காட்டினார்.

அவரும் வேஷத்திலிருந்து விடுபட்டதும் கோவிந்தனாக நின்ற

காட்சி ப்ரமிக்கச் செய்தது. "அப்பா! இவர் என்னைப் பெற்ற பிதாவென்று வந்தவரல்லவா?" என்று ஆச்சரியமாக மணி கேட்டாள். ஆநந்தப் பரவசனாய் மணியை நோக்கி "என் செல்வி! இப்போதும் நான் உன்னைப் பிதாவென்று கூறிக்கொள்ளக் கூடாதா! நான் மக்களில்லாத மாபாவி. எனக்கு நீயே மகளாகவிருந்து என் குறையும் தீரும்படிக்குச் செய்யலாகாதா!......அதோ! அதோ! என் அன்பான உத்தமரே! நாயுடுகாரு! இன்பமணீ! அதோ நிற்கும் பாதகி தான் என் மனைவியாக, நான் அக்கினி சாக்ஷியாக ஏற்றுக்கொண்ட துஷ்டப் பாம்பு. இப்பாம்பை—பிரமராக்ஷஸியை—மணந்து நான் அடைந்த துன்பத்தைக் கூறவே திறமன்று" என்று ஓலகாம்பாளைக் காட்டினார்.

கோவிந்தனைக் கண்டதுமே ஓலகாம்பாளின் தேகமே குலுங்கியாடியது. வேரற்ற மரம்போலத் தனித்த நிலைமையிலிருக்கையில் கோவிந்தன் அவளைத் தரதரவென்று பிடித்து இழுத்துக்கொண்டு வந்து "அடி பாதகி! கிராதகி! இதோ! உன்னுடைய தீவிரமான முயற்சிக்குத் தக்க சன்மானம். இந்த உத்தமரின் உயிருக்கு ஹானி தேடும் கூட்டத்தினருக்கு உடந்தையாகவிருந்து சேஷி என்ற பெயருடன் அவர் வீட்டிற்கே சென்று எமன் போல நீ செய்த மோசத்தை மனிதர்களறியமாட்டார் என்று எண்ணினாய்! உலகத்தையே உண்டு மகிழும் ஜகதீசன் கூட அறியமாட்டார் என்றல்லவோ அத் திமிர் பிடித்த நிலையில் எண்ணினாய்! இப்போது என்னென்ன நகைகளையும், உடைகளையும் சிங்காரித்துக் கொள்ளப் போகிறாய் என்பதைப் பாரு. உன் கூட்டத்தவருடன் நீயும் இந்த மகிழ்ச்சியை அனுபவி." என்று கூறிக்கொண்டே நாயுடுவின் கைத் துப்பாக்கியைப் பிடுங்கி ஓலகாம்பாளின் இரு கால்களிலும் ஒரு நொடியில் சுட்டுவிட்டார்.

ஹா!வென்று அலறியவாறு அவள் பதில் பேசாது கீழே விழுந்தாள். இதைக் கண்ட இன்பமணி அலறிப்போய் "தங்கள் மனைவியா இவள்! ஐயோ! இவள் நேற்று என்னிடம் வந்து (விஷயத்தைக் கூறி) இப்படிக் கூறி என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டதும் என்னை யவர்களிடம் காட்டிக் கொடுப்பதற்குக் கற்ற உபாயத்தில் இதுவும் ஒன்று என்று நான் அப்போதே சந்தேகித்தது சரியாகிவிட்டதே! என்ன வஞ்சனையடி! பாதகி! உண்மையைப்போல பாசாங்கு செய்து என்னை ஏமாற்றினையே! ஹா! ஸ்திரீகளுக்கும் இத்தகைய ராக்ஷஸ புத்தி யிருக்குமா! ஐயோ! ஆச்சரியமாக விருக்கிறதே!" என்று வியந்தாள்.

ரங்கமணி தன் பர்த்தாவை உயிருடன் காணப் பெற்ற பாக்கியத்தில் தன்னை மறந்து அவருள்ளத்தில் ஐக்கியமாகிவிட்டாள்.

ஆதலால் ஏதும் பேசவே இல்லை. உத்தமருக்கும், நடந்துள்ள குழப்பங்களும் அனியாயங்களும் தற்போது முடிவடைந்த அதி யற்புதமான செய்கைகளும் பார்க்கப் பார்க்க "ஹா! உலகம் இத்தகையதா!"வென்று பிரமிப்பும், திகைப்பும் உண்டாகிவிட்டன. ரங்கமணியைத் தேற்றி தைரிய மொழிகளைக் கூறினர்.

கோலாட்ட ஸெட்டைச் சேர்ந்த ஒரு வகுப்பு 10 பெண்களும், அவர்களின் தலைவியும் ஒரு தனி பஸ்ஸில் அப்போதுதான் வந்து இறங்கினர்கள். உள்ளே வந்த அவர்களின் தலைவி உத்தமரையும், வாஸுவையும், மற்ற எல்லோரையும் பார்த்துக் கட்டு மீறிய ஆநந்தத்துடன் "ஆ! எங்கள் தலைவரே! த்யாக மூர்த்தியே! உத்தம சிரேஷ்டரே! எங்கள் மனங் குளிர்ந்தது. கடவுள் எங்கள் பங்கிலிருந்தார். வாஸு! என்ன ஆச்சரியமெல்லாம் நடந்து விட்டன!" என்று ஆசிரமத்துத் தலைவி தாய்க் கிழவி கோலத்திலிருந்து விடுபட்டுக் கூறினள்.

கூட வந்த பெண்களில் ஜெயமணி தன் கோலாட்ட சிங்காரத்தைக் களைந்துவிட்டு "ஹா! கோவிந்த மாமா! கோவிந்த மாமா! எங்களை மறந்தே போய்விட்டீர்களே!" என்று கட்டிக்கொண்டது. அங்கு சுடப்பட்டு விழுந்து கிடக்கும் ஓலகாம்பாளைப் பார்த்து "ஹா! மாமியா! என்ன மாமா! ஏன் சுட்டுத்தள்ளி இருக்கு?" என்று கேட்டாள்.

அதே சமயம் ஒரு மடவன்னம் ஓடி வந்து "என் கண்மணீ! என்னுருயிர் நவமணி! என் ஜெயமணி!" என்று கூறிக்கொண்டே இறுகத் தழுவி, ஜெயமணியைக் கட்டி முத்தமிட்டு கோவெனக் கதறி யழுதாள். கூறத் திறமற்ற பிரமிப்பை யடைந்த கோவிந்தன் "ஆஹா!......ஸ்ரீமணீ! ஸ்ரீமணியா! கதிர்வேலுவின் குமாரத்தி ஸ்ரீமணியா! என்ன ஆச்சரியம்? மோட்டார் பஸ்ஸில் நீ அறைபட்டு இறந்துவிட்டதாக நாங்கள் சகல சடங்குகளும் செய்துவிட்டோமே! என் ஆப்த மித்திரனின் செல்வி! நீ என்ன மாயமாய் மீண்டாய்!" என்று அதியாச்சரியத்துடன் கேட்டார்.

உடனே அம்புஜம் "தந்தையே! கடவுளின் அற்புதமான செய்கைகள் ஒன்றன்பின் னென்ருக அதி யாச்சரியமாகவே நடைபெற்றுவிட்டன. இந்த ஆநந்த குதூகலத்திலேயே இருந்தால் வந்த காரியம் ஆவதெங்ஙனம்? நாம் வீட்டிற்குப் போய் ஒவ்வொரு ரகஸிய விவரங்களையும் பேசிக்கொள்வோம். இங்கு ஆகவேண்டிய காரியங்களை முதலில் கவனிப்போம். இன்ஸ்பெக்டர், ஸுபரின்டென்

டென்டு முதலிய பல உத்யோகஸ்தரும் காத்திருக்கிறார்கள்''. என்றாள். பிறகு எல்லோரும் அந்த இடம் முற்றிலும் சுற்றிப் பார்க்கலானார்கள்.

நாயுடு அன்று காலையில் பார்த்த இடங்களைத் தவிர வேறு அனேக இடங்களை எல்லாம் திறந்து பூட்டை யுடைத்துப் பார்த்தார். "அடாடா! என்ன ஆச்சரியம்! என்ன புதுமை! உத்தமர் உள்ளே தவம் செய்வதுபோல உட்கார்ந்திருப்பதைக் கண்ட உத்தமரே திடுக்கிட்டுவிட்டார் என்றால் கூறவேண்டுமா! வாஸுவும், ரங்கமணியும் "ஹா! இந்த உருவத்தைத்தான் எங்களுக்குக் காட்டினான். ஆகா! இதென்ன ஆச்சரியம்!'' என்று அருகில் சென்று கவனித்துப் பார்த்தார்கள். அது மெழுக்கால் தத்ரூபம் உயிருள்ள மனிதரைப் போலவே செய்த உருவம் என்று தெரிந்து பேராச்சரிய மடைந்தார்கள். அதே மெழுக்கினால் இன்னும் பல உருவங்கள் ராமகிருஷ்ணாதி கடவுளின் உருவங்கள், ஆங்கிலேயர்களைப் போன்ற சில உருவங்கள் முதலியவற்றைக் கண்டதும் அங்குள்ள சிலர் இந்த உருவங்களை நான் அந்த எக்ஸிபிஷனில் பார்த்தேனே! ஆம். அதுவேதான். இது என்ன ஆச்சரியம்'' என்று திகைத்து நின்றார்கள். போலீஸாரே ப்ரமித்தார்கள்.

இதற்குள் அம்புஜம் "ஆகா! இப்போது விளங்குகிறது. தந்தையே! சற்று கவனித்துப் பாருங்கள். நன்றாக வேலையில் தேர்ச்சி பெற்றவர்களை எல்லாம் இவர்கள் தூக்கிக்கொண்டு வந்து சிறையில் வைப்பதைப் போல வைத்து மிரட்டி அடிமையாக்கிக் கொண்டு எந்தெந்த தொழிலாளிக்கு எது தெரியுமோ அவைகளைச் செய்யும்படியாகக் கூறி வற்புறுத்தி இந்த விதமெல்லாம் செய்வித்து இதை வெளியில் கொண்டுபோய் விற்றும்—கண் காட்சிகள் வைத்தும்—பல விதமாகப் பணம் திரட்டி இருக்கிறார்கள்,'' என்றாள்.

இதைக் கேட்ட நாயுடு அதிக சந்தோஷமுற்று "செல்வி! மெச்சினேன். உன்னுடைய கூர்மையான யோசனைக்கு மெச்சினேன். நான் இன்று காலையில் சில சாமான்களைப் பார்த்தேன். இங்குள்ள சிங்காரம் கம்பெனி, மங்களம் கம்பெனி முதலிய முதலாளிகளின் புகைப்படத்தையும் அந்த முத்திரையிட்ட சாமான்களையும் பார்வையிட்ட உடனே இதே தீர்மானத்தைச் செய்தேன். உன்னுடைய யோசனை எவ்வித மிருக்கிறதோ, அதைப் பார்த்துக் கொண்டு பிறகு என் அபிப்பிராயத்தைத், தெரிவிக்கலாம் என்று வாளாவிருந்தேன். பலே! பல விதத்திலும் நீ என்னை மிஞ்சிவிட்டாயே!'' என்று சந்தோஷத்துடன் தட்டிக்கொடுத்தாள்.

# நாவல் வாசிப்போருக்கு நல் விருந்து

| | | |
|---|---|---|
| **பங்கு 1**<br>ரூ. 3/8.<br>வைதேகி<br>பத்மசுந்தரன் | இந்த அரிய<br>சந்தர்ப்பம் | **பங்கு 2**<br>ரூ. 3/8.<br>சாருலோசனா<br>காதலின் கனி<br>ஜெயஸஞ்ஜீவி |
| குறைந்த<br>விலை | **பங்கு 3**<br>ரூ. 3/8.<br>நவநீத கிருஷ்ணன்<br>சண்பக விஜயம்<br>உத்தமசீலன் | தபாற்<br>செலவு<br>இனம் |
| **பங்கு 4**<br>ரூ. 4/-<br>ருக்மிணிகாந்தன்<br>கௌரீமுகுந்தன்<br>ஸாரமதி<br>நளினசேகரன் | மறுபடியும்<br>நேராது. | **பங்கு 5**<br>ரூ. 3/.<br>ராதாமணி<br>சாமளநாதன் |
| முன் பணம்<br>அனுப்பவும் | **பங்கு 6**<br>ரூ. 1/12<br>பரிமள கேசவன்<br>கதம்பமாலை<br>படாடோபத்தின் பரிபவம் | வி. பி.<br>கிடையாது. |
| **பங்கு 7**<br>ரூ. 1/8.<br>சோதனையின்<br>கொடுமை<br>மூன்று வைரங்கள்<br>பக்ஷமாலிகா | "ஜகன்மோகினி" ஆபீஸ்<br>26. தேரடித் தெரு<br>திருவல்லிக்கேணி | **பங்கு 8**<br>ரூ. 1/8.<br>சுகந்த புஷ்பம்<br>கோபாலரத்னம்<br>வீரவஸந்தா |

குறிப்பு:—மேற்கண்ட பங்குகளாக இல்லாமல் வெவ்வேறு புத்தகங்கள் வேண்டியவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கு விதம் குறைத்து மீதியை அனுப்பலாம்.

நமக்குத் தெரிந்தவரையில்

தமிழ்ப் பத்திரிகையுலகில் இதுவரை

நடைபெறாத சம்பவம்

இனாம்　　　முற்றிலும்　　　இனாம்

# இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்படும் நாவல்கள்

நமது

## ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

ஜீவிய சந்தா ரூ. 25.

---

**உங்களுக்கு எந்த நாவல் இனாமாக வேண்டும்?**

கீழ்க்கண்ட விவரத்தைப் படித்து, உங்களது நேயர்களின் சந்தாவை அனுப்பும்போது, வேண்டிய புத்தகங்களின் பெயரைத் தெரிவியுங்கள். மறு தபாலில் தபாற்செலவின்றி அனுப்புகிறோம்.

பரிசு புத்தகங்கள்

(1) ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு — ஜெயஸஞ்சீவி

(2) 2 புதிய சந்தாதாரர்களை ,, — நளினசேகரன் அல்லது மூன்று வைரங்கள் அல்லது வீரவஸந்தா

(3) 3 ,, ,, — கோபாலரத்னம்

(4) 4 ,, ,, — கதம்பமாலை அல்லது சுகந்தபுஷ்பம்

(5) 5 ,, ,, — கௌரீமுகுந்தன் அல்லது ஸாரமதி

(6) 6 ,, ,, — சண்பகவிஜயம்

(7) 7 ,, — சாமளநாதன் அல்லது ருக்மிணீகாந்தன் அல்லது நவநீதகிருஷ்ணன்

(8) 8 ,, ,, — வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனா அல்லது பரிமளகேசவன் & உத்தமசீலன்

ஆசிரமத்துத் தலைவி இந்த மெழுகு பொம்மைகளைப் பார்த்ததும் "ஆகா! இதைப் பார்த்தால் என் சகோதரனின் நினைவு வருகிறது. இத்தகைய மெழுகு வேலை வெகு அருமையாகச் செய்து வந்தவன் திடீரென்று காணாது போய்விட்டான். இப்போது தாங்கள் சொல்வதிலிருந்து என் சகோதரனையும் இப்பாவிகள் இங்கு கொள்ளையடித்துக்கொண்டு வந்திருப்பார்களா! ஹா! அப்படியாயின் இங்கல்லவோ என் அண்ணன் இருக்கவேண்டும். பிரபுவே! நாயுடுகாரு. இங்குள்ள ஆட்களை எல்லாம் தயவு செய்து எனக்குக் காட்ட முடியுமா?" என்று கண்ணீர் பெருகக் கேட்டாள்.

இதைக் கேட்ட நாயுடு முதலிய எல்லோருக்கும் அதிக வருத்தமாகிவிட்டது. உடனே நாயுடு அந்த தலைவியை அழைத்துக்கொண்டு அங்கு சுடப்பட்டிருப்பவர்கள் முதல் பதுங்கியவர்களையும், உள்ளே போட்டு பூட்டியவர்களையும் காட்டி "இவர்களில் உன் சகோதரன் யாரம்மா? பாருங்கள்" என்றார்.

அறையி லடைக்கப்பட்டவர்களில் ஒருவன் இவர்களைப் பார்த்ததும் அபாரமான ஆவேசத்துடன் "ஹா! மீனா! மீனாக்ஷி! மீனாக்ஷியா?" என்று பதறியவாறு கேட்டு ஓடி வந்தான். மீனாக்ஷியம்மாள் அவனைக் கண்டதும் "நாயுடுகாரு! இதோ! இவர்தான் தமயனார்! இவர்தான்" என்று அதே சமயம் கூறி அவன் காலில் விழுந்து வணங்கி "அண்ணா! அண்ணா! என்னை அனாதையிலும் அனாதையாக விட்டு விட்டு இங்கு எப்படி வந்தாய்? என்னைத் தவிர எனக்கென்ற எல்லா மனிதரும் இறந்துவிட்டார்களென்று எண்ணி நான் பட்ட துன்பத்தைக் கூறவேண்டுமா?" என்று கதறினாள்.

இதைக் கேட்ட அவள் அண்ணனும் கண்ணீர் பெருக, தங்கையைத் தூக்கி நிறுத்தி தடவிக்கொடுத்தவாறு "தங்காய்! மீனா! நான் கடைசியாக அன்று மகாத்மா காந்தியைப் போல ஓர் சிறிய உருவம் செய்தேனல்லவா! அதை விற்பதற்கு வழக்கம்போல கடைத்தெருவிற்குச் சென்றேன். அங்கு இதோ இந்த பரம சண்டாளன் செட்டியார் என்று கள்ளப் பெயர் பூண்டு மங்களம் கம்பெனி என்று ஒன்று வைத்துக்கொண்டு மகா யோக்யன்போல கற்பனைக் கோட்டையில் மேல் வீதியில் அட்டகாஸம் செய்து வந்த—வரும்—பீடைப் பிரபு என் க்ரகசாரம் போதாது என்னைச் சந்தித்தான்.

என்னைத் தூக்கி ஆகாயத்தில் வைத்து தோத்திரம் செய்து பேசி இந்த வேலை வெகு அழகாயிருக்கிறதென்றும் எனக்குத் தான் எத்தனையோ உதவி செய்வதாயும் தனி கம்பெனியே வைக்கத் தான்

ஏற்பாடு செய்வதாயும் ஏதேதோ ஆகாயப் பந்தல் போட்டு அந்தரத் தோரணங்கட்டி மயக்கினன். இந்த இரண்டும் விலை என்னவென்று கேட்டான். நான் ஏதோ ஒரு விலை சொன்னேன்.

அதற்கு இந்தப் பாவி வெகு நாணயக்காரன்போலப் பேசி "அடாடா! இத்தனை அருமையான வேலையை எத்தனை நயமாகக் கூறுகிருயே! இவ்விரண்டிற்கும் குறைந்தது நூறு ரூபாயல்லவோ நான் மதிப்பிட்டேன். சரி; இவ்விரண்டையும் நான் எடுத்துக் கொள்கிறேன். இப்போது என் கையில் செக்குதானிருக்கிறது. என்னோடு கூடவந்தால் இப்போதே பாங்கியில் மாற்றிக் கொடுத்து விடுகிறேன்" என்ருன்.

பணம் என்ருல் யாருக்குத்தான் ஆசையில்லை. அதிலும் கையில் காலணு கிடைக்காத எனக்கு சேர்த்தாற்போல நூறு ரூபாய் என்ருல் என்னையே மறந்து கூடவே காரில் ஏறிக் கொண்டேன். உடனே வெகு வேகமாக கார் இப் பாழும் குகைக்கு வந்தது. விவரமறியாத நான் உள்ளே சென்றதும் ஓர் அறையைக் காட்டி உட்காரச் செய்தான். உட்கார்ந்தவாறே இருந்தேன். வழியே இல்லை. நேரமோ கடந்து கொண்டே போகிறது. பிறகு ஒரு தட்டில் ஆகாரம் வந்தது.

அதைக் கண்டதும் எனக்கு ஒரு விதமான பயம் அதிகரித்தது. "இதென்ன ஆகாரம். செட்டியாரெங்கே?' என்றேன். கூட வந்தவன் நகைத்துவிட்டு "செட்டியாராவது, பானையாராவது. எல்லாம் ஒரே மொடாவார்தான் வா! எங்களுக்கு ஆன கதிதான் உனக்கும். இனி நீ சாகும்போதுதான் இவ்விடம் விட்டுச் செல்லலாம்" என்ருன். அம்மொழியைக் கேட்டு ப்ரக்ஞையே யற்று விட்டேன்.

பிறகு விழித்துக்கொண்டு விவரங் கேட்டேன். "ஐயோ! அந்த அக்ரமக் கொள்ளையை ஏன் கேட்கிறீர்கள்? இதோ இவன் தகர வேலை செய்பவனும். இவன் இரும்பு வேலை செய்பவனும். இவன் குழந்தைகள் சாமான்கள் கை வேலை செய்பவனும். இன்னும் இதுபோல எத்தனை பேர்கள்—தறி போடுகிறவன், நூல் நூற்பவன், பொம்மைகள் செய்பவன். பல தொழில்கள் செய்யத் தெரிந்த ஒவ்வொருவரையும் என்னைச் செய்ததுபோலவே செய்து, பிடித்துக் கொண்டு வந்து இங்கு படுத்தாத இம்சைகளும் செய்து அடிமைகளாக்கி இங்கு எங்களிடம் வேலையை வாங்கிக்கொண்டு வெளியே சென்று வியாபாரம் செய்வதும், எங்களை இப்படியே அடைத்திருப்பதும் தொழிலாகக் கொண்டார்கள்.

சிறைச்சாலையிலிருந்து விடுபட்ட கைதிகளில் நல்ல தொழில் தெரிந்த ஆண் பெண்களை எல்லாம் கொண்டுவந்து இங்கேயே சிலரை வைப்பதும், சிலரை கங்காணிக்கு விற்று விடுவதும், ஐயோ! நடக்கும் அக்ரமம் கூறத்திறமன்று. இதோ இவன் கையைப் பாருங்கள்; ஒடித்துவிட்டார்கள். காரணம் என்னவெனில் இவனை வெளியிலிருக்கும் தென்னை மரத்தில் தேங்காய் பறிக்க அழைத்துச் சென்றார்கள். இவன் ஒரு கொலை கேஸுக்காகப் பயந்திருக்கையில் இவர்கள் இவனை இங்கு ஒளித்திருந்தார்கள். இவனுக்கு வெளியில் செல்ல பயம் எனினும் இங்குள்ள அக்ரமத்தைக் கண்டு சகிக்க முடியாது தவிப்பான்.

வெளியில் போயிருக்கையில் இவன் கையிலிருந்த கத்தியின் கூர்மையினால் ஒரு மரத்தில் ஏதோ எழுதினானும். அதைப் பார்த்துக்கொண்டே வந்த அவர்கள் இவனை இழுத்துக்கொண்டு வந்து இவன் கையை உடைத்து விட்டார்கள்'' என்றதும், வாஸு "ஆம் ஆம்! நாயுடுகாரு! இதோ பாருங்கள்.தாங்கள் கூப்பிடுவதாக எங்களை ஏமாற்றி இங்கு அழைத்துக்கொண்டு வந்தபோது நான் அம்மரத்தைக் கவனித்தேன். இதோ பட்டைகளை செதுக்கித் தள்ளி இருந்ததைப் பொறுக்கினேன். இதன் பொருளைக் கண்டுபிடித்து இதை எழுதினேன்.'' என்று கூறி அவைகளை நாயுடுவினிடம் கொடுத்தான்.

நாயுடு இந்த அபாரமான சாமர்த்திய மூளையைக் கண்டு பேராச்சரிய மடைந்தனர். "வாஸு! நீயும் பெரிய துப்பறிபவனாகி விட்டாயே! பேஷ்! பேஷ்! உன் எதிரியின் இடத்திலேயே வேலை செய்து துப்பறியும் வேலையைக் கற்றுக் கொண்டாய்'' என்றார்.

உத்தம:—(அபாரமான சந்தோஷத்துடன்) நாயுடுகாரு! இவருடைய துப்பறியும் திறமையை நான் முன்பே தெரிந்துகொண்டேன். நானே இவருக்குத் துப்பறியும் தொழிலை யுண்டு பண்ணியதற்குப் பலனாக என் பொருளையே கொள்ளை யடித்து விட்டார். அசாத்யப் பேர்வழி. இவருடைய கள்ளத் தனத்தைக் கண்டுபிடிக்க யாரை துப்பறிய வைப்பது தெரியவில்லை—என்று ஆசிரமத்துக் கண் காக்ஷி விஷயங்களைக் கூறினார்.

நாயுடு:—ஓகோ! அப்படியா செய்தி. பலே பலே உத்தமரே! நான் சிபார்சு செய்கிறேன். தாங்கள் பெரிய மனஸு செய்து கொள்ளை யடித்த பொருளை அவனுக்கே கொடுத்து விடுங்கள். திருட்டுச் சொத்து நமக்கு வேண்டாம்—என்று கூறிக் கண்ணைச் சிமிட்டியவாறு மணியையும், வாஸுவையும் பார்த்தார்.

பிறகு நொண்டியை நோக்கி "ஏனப்பா! நீதான் இங்கு

ஒளிந்துகொண்டிருக்கையில் இம்மாதிரி அதில் எழுதினால் உனக்கு ஆபத்தில்லையா ?'' என்றார். அதற்கவன் "ஐயா! நான்தான் பாதகத்தைச் செய்துவிட்டேன். அனுபவிக்க வேண்டியது கடமை. நிரபராதிகளான மற்றவர்களின் இம்சையைக் கண்டு சகிக்க முடியவில்லை. அதற்காக நான் எதுவாகினும் ஆகட்டும் என்று துணிந்து எழுதினேன். இதை யாராவது வெளியார் பார்த்தால் இவர்களின் கஷ்டம் நீங்கட்டுமே...கப்பலிலேற்றும் பெண்கள் கலங்கும் கோரமை நீங்கட்டும். நான் அகப்பட்டுக்கொண்டு தூக்கு மேடை ஏறினும் பாதகமில்லை என்று நினைத்துவிட்டேன்'' என்றான்.

இப்படியே அனேகம் பேர்கள் அங்கு தம் தம் குறைகளையும் அங்கு நடந்த கொடுமைகளையும் கூறியதைக் கேட்ட போலீஸார் பிரமித்தார்கள். "ஐயா! நாங்கள் இந்த இடத்தில் குகை இருப்பதையும், இங்கு ஓர் சாமியார் இருக்கிறார் அவர் விபூதி கொடுக்கிறார் என்பதையும் மட்டும் கேட்டிருக்கிறோம். மந்திரமும் தந்திரமும் நம்பும் பேதையர்கள் சிலர் இங்கு வருவதாயும் கேள்வியுண்டு. ஆனால் பெயருக்கு சாமியார் குகை என்று கூறிவிட்டு இந்த பாதகக் கூட்டம் பெருங் கொள்ளைக் கூட்டமாக இருக்கிறதென்பதை யறியவில்லையே. துப்பறியும் புலியாகிய நீங்களும் கவனிக்காதிருந்தீர்களே!

இங்கொரு ரகஸ்யக் கூட்டமிருப்பதை ஸ்ரீமதி அம்புஜம்மாள் கூறி உத்தமரின் வரலாறு முதல் சகலத்தையும் தெரிவித்து எங்களையும் உடன் வரும்படியாகக் கேட்டார்கள். போலீஸ் பந்தோபஸ்துடன் பகிரங்கமாக வரவேண்டாமென்று எங்களுக்கெல்லாம் இந்த வேஷத்தை மாட்டி அழைத்து வந்த பிறகுதான் விவரம் தெரிகிறது. ஆச்சரியம்'' என்றார் போலீஸ் அதிகாரி.

நாயு.—ஐயா! உத்யோக முறையில் சிற்சில விஷயங்களில் நமக்குள் முதலில் அபிப்பிராயபேதப்பட்டிருப்பினும் அனேகமாக முடிவில் ஒன்றுகூடி விடுவோம். இவ்வழக்கில் முதலிலிருந்தே ஒன்றாக உழைத்துவிட்டோம். வேளை வரும்போதன்றோ நமக்குக் கடவுள் கண்ணைக் காட்டுவார். இந்த துஷ்டக் கூட்டத்திற்கு இத்தனை நாள் உயிரிருந்தது; இன்று முடிந்துவிட்டது. இப்பாதகர்கள் என்னை தம் குகையில் அடைப்பதற்காக யுக்தி செய்து என் உதவியை நாடுபவர் போல நடித்து என் தலையைத் தடவினார்கள். அப்பா! எனக்கா தெரியாது. என்னை ஏமாற்றப் பார்க்கும் இவர்களின் வசமாக விருந்தே இவர்களைத் துலைக்க வழி செய்வதற்குத்தான் நான் அகப்பட்டுக்கொள்வதுபோல அபிநயித்து எல்லாப் பொறுப்பையும் என் செல்வியின் தலைமீது போட்டேன். நான் ஒரு எமன்தான் இருப்பது என்று இவர்கள் எண்ணினார்கள், இவளும் ஒரு எமன்தான்

என்பது தெரியாது. பாவம்...ஐயா! சாமியார் இருக்கிறார் என்று தான் என்னையும் அழைத்து வந்தார்கள். அந்த சாமியாரைப் பார்ப்போம்; வாருங்கள்—என்றார்.

அங்குள்ள இடம் ஒன்றுவிடாமல் சுற்றிப் பார்த்துவிட்டு இவர்களின் பெட்டி முதலியவைகளைக் கிளறிச் சோதனை செய்ததில் உத்தமர் பேரில் லஞ்சம் வாங்கிய பழியை வேண்டுமென்று கொண்டு வருவதற்காகக் கிராமத்து ஜனங்களில் சிலரை இவர்கள் தயார் செய்து, அவர்கள் லஞ்சங் கொடுத்ததாயும் அது போதாதென்று உத்தமர் மிரட்டியதாயும் கூறும்படி வற்புறுத்தியதற்கு ஆதாரமான கடிதங்களின் நகல்களும், பதில் கடிதங்களும் இருக்கக்கண்டு எல்லோரும் பேராச்சரியமும், பரம சந்தோஷமும் அடைந்தார்கள்.

அங்கிருந்த ஒருவன் ஓடி வந்து உத்தமர் காலில் விழுந்து "ஐயா! உத்தம ப்ரபுவே! நான் என்ன சொல்வேன்? இந்த படுபாவி ...இவனும், இருவரும் எங்களுருக்கு வந்து தாங்கள் லஞ்சம் வாங்கியதாக நிரூபிக்கச் சாக்ஷி கூறவேண்டுமென்று கேட்டார்கள். எங்களுக்கு இவ்வருட வரியைத் தாமே செலுத்துவதாயுங் கூறினார்கள்.

அதற்கு எங்களில் சிலர் "ஐயா! இந்த அக்ரமச் செய்கைக்கு நாங்கள் உடன்பட மாட்டோம். எங்களிடம் அந்த மகானுபாவன் காட்டிய அன்பை நாங்கள் மறக்க முடியாது. ஒரு உத்தமர் லஞ்சம் வாங்கியதாகக் குறை கூறிவிட்டு எங்களை லஞ்சம் வாங்கச் சொல்கிறீரா! இதை அதிகாரிகளிடம் வெளியிட்டு விடுகிறோம்" என்றோம். அவ்வளவுதான் வந்துவிட்டது ஆத்திரம். எங்களை மயக்கங் கொடுத்து இங்கு கொண்டுவந்து விட்டார்கள். பணத்திற்கு ஆசைப்பட்ட சில கழுதைகளை படுபாவி கைக்குள் போட்டுக் கொண்டு ஏதோ சூழ்ச்சி செய்துவிட்டான் என்று தெரிந்துகொண்டோம். கூட்டி லடைபட்ட பக்ஷி என்ன செய்யும்? எங்கள் கதி அப்படி யாகிவிட்டது. உத்தமரைப்போல உருவம் மெழுக்கில் செய்யச் சொன்னபோதே எங்களுக்கு "இது எதற்காகச் செய்யும் சூழ்ச்சியோ!" என்று பயமாகிவிட்டது." என்று கூறினார்கள்.

பின்னும் பெட்டியைக் கிளறியதில் உத்தமரின் உத்யோகசாலையில் வேலை பார்க்கும் ஓர் பெரிய உத்யோகஸ்தனே இவர்களிடம் லக்ஷ ரூபாய் லஞ்சம் வாங்கிக்கொண்டு உத்தமர் மீது இக் குற்றத்தை ஊர்ஜிதம் செய்து அவரைத் தள்ளிவிட உதவியா யிருந்ததாகத் தகவல் விவரமான கடிதமும் கிடைத்து விட்டது. "ஆகா! எல்லோருடைய நிலைமையைக் கூறவேண்டுமா! ஹா! என்னப்பன் ஸ்ரீராமசந்திரமூர்த்தி இல்லையா! என்னைக் காட்டிக் கொடுப்பானா?"

என்று உத்தமர் உள்ளம் மகிழ்ந்தார். எல்லோருடைய இதயத்தி லும் ஆநந்த ஊற்று சுரந்தது.

இன்பமணி "ஹா! அப்பா! என் அரிய தந்தையே! நான் முன்பே ஒரு தினம் இக் காரியத்தை நமது விரோதிகளான பங்கா ளிகள்தான் செய்திருப்பார்களென்று கூறவில்லையா! என்ன அநி யாயம்! பெரிய உத்யோகத்திலிருக்கும் மனிதனும் லஞ்சத்திற்கு இசைந்து கை கூசாது வாங்கிக்கொண்டு நிரபராதிகளை லஞ்சம் வாங்கியதாகக் கூறத் துணிகிறுன். இந்த கற்பனைக் கோட்டை முற் றும் தங்கள் ப்ரபாவத்தைத் தெரிந்து கொண்டிருக்க இந்த அற்பப் பதர்கள், துர்புத்தி துஷ்டர்கள் விதைத்த விதை எங்கேனும் பலிக் குமா? ஹா! கருணாகரன் என்னப்பன் அவனது சரணத்தை நம்பிய வர்களுக்கு என்றும் ஆபத்து நேராது. அப்படி நேரச் செய்தாலும் சோதனை செய்துவிட்டு உடனே காப்பாற்றுவான் என்ற தத்து வத்தை பல பெரியாரின் சரித்திரங்களைப் படித்தறிந்துள்ளோம். தற்போது நேரிலேயே தெரிந்து கொண்டோம்" என்று பெரு மகிழ்ச்சி கொண்டாள்.

பின்னும் அப் பெட்டிகளில் இவர்களுக்கு ஆதாரமாக உள்ள சகல கடிதங்களையும் நாயுடு எடுத்துக் கொண்டார். அங்கு விரோ திகள் ஒவ்வொருவரையும் உத்தமர் உற்றுப் பார்த்தார். தனது உற வினர்கள் என்று கூறிக்கொண்டு அட்டகாஸமாக வரும் பீடைப் பிரபுக்களே இங்ஙனம் கூட்டத்தில் சேர்ந்திருப்பதை யறிந்து விச னித்தார். "அட படுபாவிகளே! உங்களுக்கு ஈசன் கொடுத்த புத் தியை நல்ல வழியில் செலவிடுவதற்கு ஏன் தோன்றுது இத்தகைய படுமோசக் குழியிலிறங்கினீர்கள்? என்னுடைய செல்வத்தையும் இன்பமணியையும் அடித்துக்கொண்டு போவதற்கு இத்தகைய ராக்ஷஸ வேலை செய்து, பலரை இம்ஸித்து, என்னையும் நடு நிசியில் கொலை செய்ய வந்து கத்தியை ஓங்கினீர்களே! உங்கள் துற்காரியம் ஜெயம் பெற்றதா? என்று கூறுவதற்குள் இன்பமணி குறுக்கிட்டு "அப்பா! தாங்கள் எங்கே மறைந்திருந்தீர்கள்?" என்று ஆச்சரியத் துடன் கேட்டாள்.

உத்தமர்:—அம்மா! விவரம் கூறுகிறேன் கேளு. அன்றொரு நாள் நான் எழுந்திருப்பதற்கு நேரமாய் விட்டதென்று என்னறை யில் தேடிக்கொண்டு வந்தாயே! அப்போது என்னிடம் ஒருவர் பேசிக்கொண்டிருந்ததை நீ கவனித்தாயல்லவா? அப்போது என் ளுேடு பேசிக்கொண்டிருந்தவர் சாமானிய மனிதரல்ல. அவர் என் ளுேடு உத்யோகம் செய்யும் பெரிய மனிதரின் பிதா. அவரும் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்; என்னுடைய உயிர்த்தோழர்.

அவர் திடீரென்று என்னைக் கண்டு என்னுடன் ஓர் ரகஸியம் சொல்ல விரும்புவதாயும், யாரும் வராத தனித்த விடத்திலிருக்க வேண்டுமென்றும் கூறினர். நான் மீண்டும் என் படுக்கை யறைக்கே சென்றேன். அவர் என்னிரு கரங்களையும் பிடித்துக்கொண்டு கோ வெனக் கதறியவாறு "என்னப்பனே! உத்தமா! என் வெட்கக் கேட்டை நான் என்னவென்று வெளியிட்டுக் கூறுவேன். உன்னோடு வேலையாக விருக்கும் என் மகன் கல்யாண ராமனுக்குச் சகா வாகச் சேர்ந்துள்ள சகா ராமனின் துர்ச் சகவாசத்தினுல் அவன் பாழாவதுடன் வெகு கண்ணியமான என் குடும்பத்திற்கே அழியாத அவமானங்கள் உண்டாகின்றன.

அவன் மனைவியோ மகா உத்தமி. சாந்தகுணமுடையவள். எத்தனை நற்குணமுண்டோ அத்தனையும் அவளுக்கு இருப்பிடமாக விருக்கிறது. அவள் எத்தனை நல்வார்த்தைகளால் அவனைத் திருப்பியும் அவன் அந்த பாதகனின் சிநேகத்தை விடவில்லை. அவனுடையவும், இன்னும் உங்களுடைய எதிரிகளின் கூட்டத்தினருடையவுமான சதியாலோசனையின் பயனாக அக்காரியத்தில் இவனும் தலையிடச் செய்து விட்டது.

"நீ மட்டும் இன்னும் வேலையில் உயராம லிருக்கிறாயே! உத்தமன் எத்தனை உயர்ந்து விட்டான் பாரு. அவன் மீது நீ இக் குற்றத்தை ருஜூப்பித்துவிட்டால் உனக்கு வேலை உயர மார்க்கமாகிவிடும்" என்று ஏதேதோ கலகம் செய்ததை, இந்த மடையன் கேட்டுக் கொண்டு லக்ஷ ரூபாய் லஞ்சம் வாங்கிக்கொண்டு உன்மீது பழி சுமத்தத் துணிந்த செய்தியை நான் ஜாடையா யறிந்ததும் "தலையில் இடி விழுந்து விட்டதே! குடி முழுகி விட்டதே!" என்று அடித்துக் கொண்டேன். இச் செய்கைகள் முற்றும் உனக்கே விபத்தாக வருமே என்று அவனிடம் நான் பல விஷயங்களை எடுத்துரைத்தேன். அவன் மனைவியும் எவ்வளவோ முட்டிக் கொண்டாள். தான் பிராணத்தியாகம் செய்து கொள்வதாயும் கூறுகிறாள்.

என் வீடு தற்போது அல்லகல்லோலமாக விருக்கிறது. தாங்கள் எப்படியாவது என் மானத்தைக் காக்க வேண்டும், உயிர்ப் பிச்சை யளிக்க வேண்டும்" என்று கதறினர். நான் என்ன சொல்வது? எனக்குண்டான வியப்பிற்கு எல்லையே இல்லை. என்னையே நம்பாது திகைத்தேன். எனினும் என் இதயத்தில் என்னை ஏதோ ஒரு சக்தி ஊக்கியது. கிழவருக்குத் தேறுதல் கூறவே துணிந்தேன்.

"ஐயா! நான் லஞ்சம் வாங்கியவன் என்று நிச்சயித்து என்னை தண்டனையே செய்யட்டும். கடவுளுக்கு நான் நிரபராதி என்பது

நன்ருகத் தெரியும். அவருக்கு என் செய்கை குற்றமற்றதாகி விட்டால் அதுவே போதும். என்னுல் கூடிய வரையில் உங்கள் மகனுக்கு யாதொரு கெடுதியுமின்றி நான் பார்க்கிறேன். உங்களுடைய முகத்திற்காக நான் பழியை ஏற்கிறேன். பெரிய குடும்பமும், கிழப் பிராணனும்,உத்தமியின் உயிரும் துடிக்க நான் சகியேன்.இந்த தியாகத்தை நான் செய்யத் தயாராக விருக்கிறேன். உலகத்திற்கு நான் பழிகாரனுக விளங்குவதைப் பற்றி நான் இனி பொருட்படுத்தவில்லை; தாங்கள் கவலையுறவேண்டாம்.'' என்று தேற்றித் தைரியங் கூறினேன்.

ஆனுல் நான் நினைத்ததொன்று. கடவுளின் செயலால் நிகழ்ந்ததொன்ருகிவிட்டது. நான் லஞ்சம் வாங்கிக்கொண்டேன் என்று நானே நிரூபித்துக்கொள்ளவேண்டிய பல ஏற்பாடுகளும் செய்ய எத்தனித்தேன். அதற்குள் அன்றிரவே நடந்த பயங்கர சம்பவம் எல்லாவற்றையும் அழித்துவிட்டது. இரவு நான் நித்திரை கொள்ளாமல் புரண்டுகொண்டே எப்படிச் செய்தால் ;காரியம் கைகூடும் என்று யோசித்தேன்.

“சீச்சீ! இந்த சொத்துக்கள் தானே இவ்விதம் செய்கின்றன. இந்த பணமே வேண்டாம். இந்த உயர்ந்த பதவி உத்யோகமும் வேண்டாம். இவ்விரண்டையும் ஒழித்துவிட்டு மூவரும் நிர்மல மனத்துடன் பயமின்றி கூலி வேலை செய்தேனும் பிழைக்கலாம். அதற்கும் ஆபத்து வருங் காலையில் பார்த்துக்கொள்வோம்.'' என்று எனக்குள் முடிவு செய்துகொண்டு படுத்திருக்கையில், என்னறைக்குள் தபதப என்று காலடிச் சத்தங் கேட்டது. நான் தூங்குவதுபோல விருந்து பார்த்தேன்.

என்ன ஆச்சரியம்! எனக்கு உறவு என்று கூறும் இரு மனிதர்களும், அந்த உத்யோகஸ்தனுமே வந்து என் படுக்கை யருகில் ரகஸியமாக நிற்பதைக் கண்டு கூறத் திறமற்ற வியப்படைந்தேன். இனி நித்திரையிலிருந்தால் உபயோகமில்லை. சுட்டாலும் சுட்டுவிடுவார்கள். என்று தோன்றியது. உடனே நான் அப்போதே விழித்தவன் போல எழுந்து என் பக்கலிலேயே இருந்த பொத்தானை யழுத்தியதும் பிரகாசமான விளக்கு எரிந்தது. அடுத்த நிமிடமே, “ஓ! மை டியர் சார்! என்ன விசேஷம்? அர்த்த ராத்திரியில் இங்கு வந்தது?'' என்று கேட்டேன்.

அதற்கு அவன் “பேசாதே! டியர் சாரும், டயர் சாரும் இந்த விடத்திற்கு இல்லை. நீ உண்மையை ஒளிக்காது கூறுகிருயா, இல்லையா! இன்று காலை அந்த கிழட்டுப் பிணம் உன்னிடம் என்ன பேசியது? அந்த விவரத்தை உடனே சொல்லு.'' என்ருன்.

நான் மெல்ல நகைத்துக்கொண்டே "ஐயா! அவர் உங்களைப் பெற்ற பிதாவன்றோ! மக்களின் சுக வாழ்க்கையை மகிழ்வுடன் கோருவது பெற்றோரன்றோ? அவர் தன் கடமையைத் தான் செய்தார். உம்முடைய நன்மைக்குத்தான் பாடு படுகிறார். இந்த அல்பப் பணத்திற்காகவா, பதவிக்காகவா தாங்களும் இதில் கலந்துவிட்டீர்கள்? என்னையே நேரில் கேட்டிருந்தால் என்னுடைய முழு மனத்துடன் என் செல்வத்தை உமக்குக் கொடுத்து என் பதவியையும் நீர் அடையும்படியாகச் செய்திருப்பேனே. இந்த தியாகத்தை நான் செய்யமாட்டேனா! இதற்காக இந்த துஷ்டக் கூட்டத்துடன் சேர்ந்து உமது பெயரைக் கெடுத்துக் கொள்ளவேண்டுமா?" என்றேன்.

சீற்றங் கொண்ட சர்ப்பம் போலச் சீறி விழுந்து "அடேய்! உன்னுடைய ஊழலை மறைக்க எதிரியைப் பழி கூறப் பார்க்கிறாயா! சீச்சீ! நீயும் ஒரு பெரிய மனிதனா? இந்த கற்பனைக் கோட்டை முற்றும் உன்னுடைய ஊழலை அறிந்திருப்பதை—தூற்றுவதை—நீயறியமாட்டாய். லஞ்சம் வாங்கியும், பெண்ணென்று வேஷம் போட்டு வளர்க்கும் இன்பமணியை விபசாரத்தில் ஈடுபட செய்து சம்பாதிக்கும் பொருளையுங் கொண்டு பல தர்மமும் அபார தியாகமும் செய்துவிட்டதாக நடிக்கும் யோக்யதை தெரியாதென்று பாரத்தாயா! போக்கிரியே! என்னிடமா நீ அளப்பது?" என்று கூறிக் கொண்டே அவன் கையில் துப்பாக்கியை எடுத்ததைப் பார்த்தேன்.

அதே க்ஷணத்தில் படக்கென்று விளக்கு அணைந்துவிட்டது. என் தேகத்தில் சுருக்கென்று ஒரு ஊசி குத்தியதுபோல விருந்தது. அடுத்த வினாடியே மூக்கிலும் ஏதோ திணரும் திராவகம் வைக்கப் பட்டது. அதற்குமேல் ஒன்றுந் தெரியாது. என்ன நடந்ததென்பதெல்லாம் இதோ இவரைக்கேட்டால் தெரியும். நான் கண்விழித்துப் பார்க்கையில் இரண்டு நாளாகிவிட்டதென்றும், என்னைச் சுட்டுக் கொல்லவில்லை என்றும் தெரிந்துகொண்டேன். பிறகு இவர் கூறுவார்" என்றார்.

இந்த ஆச்சரியகரமான வரலாறுகள் எல்லோருடைய மனத்தையும் திடுக்கிடச் செய்தன. பிறகு கோவிந்தனை இன்பமணி விவரங் கேட்டதற்கு அவர் கூறத் தொடங்கினர். என்னுடைய ஆப்த மித்திரன் கதிர்வேலு எட்டு குழந்தைகளை என் வசம் விட்டுவிட்டு இறந்துவிட்டார். அக் குழந்தைகளை இப் புண்ணியவானின் தர்ம ஆசிரமத்தில் கொண்டு சேர்க்கும்பொருட்டு இம் மகானைப் பார்க்க

வும் இவருடைய பரம கல்யாண குணத்தழகைத் தெரிந்துகொள்ள வும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அதைக் கேட்டதும், நேரில் கண்டதும் என்னுள்ள மடைந்த ஓர் ஆனந்தத்தைக் கூறவே திறமன்று. ஆகா! உலகத்திற்கெல்லாம் திலகமாக விளங்கும் இவருடனேயே நாம் என்றும் இருந்து சம நிலைத் தொண்டு ஏன் செய்யக்கூடாது? ஏன் நம் ஆபாசங்களைத் தியாகம் செய்துப் பிறருக்கென்றே உயிர் வாழ்ந் துழைக்கலாகாது? இவ்வுலகம் யாவருக்கும் சொந்தம். கடவுள் எல்லோருக்கும் உரிமை யாளர். அதே போல இவ் வுலகிலுள்ள சம நிலைமையான நல்ல தொண்டுகளை ஏன் சமமாகச் செய்யலாகாது. அடங்காப் பிடாரி யான மனைவியுடன் ஒற்றுமையற்ற, இன்பமற்ற இல்லறம் என்ற பொய்யான வீட்டிலிருப்பதைவிட நல்லறமான பொதுஜன சேவை செய்து ஏன் வாழக்கூடாது? இனி அப்படித்தான் செய்யவேண்டும்'' என்று எனக்குள் தீர்மானித்து முடிவு செய்துவிட்டேன்.

பிறகு என் மனைவி என்கிற மறலியே இக் கூட்டத்தினருக்கு உடந்தையாகி விட்டதையும் அதன் மூலம் என்னை வெகுவாய் நைச் சியம் செய்துகொண்டு ஏதேதோ தந்திரம் செய்ய எண்ணியதையும் அறிந்து நானும் அதற்கு இசைபவன் போல நடித்தேன். அவர்க ளுடைய உளவை கள்ளனுக்குள் கள்ளனாகவிருந்து தெரிந்துகொண் டேன். உத்தமரின் உயிருக்கே—மணியின் உயிருக்கே—இக் கூட் டம் ஹானியைத் தேடப் போவதை யறிந்து அதைத் தடுக்க யுக்தி செய்தேன். இதன்பொருட்டே என் வேலையை ராஜீநாமா செய்து விட்டேன்.

இன்பமணியின் தந்தை எங்கேயோ தப்பி யோடிய விவரத்தை யறிந்தேன். நானே அவன் போல வர எண்ணி தீக்ஷை வைத்துக் கொண்டு வந்து சேர்ந்தேன்.சேஷி என்ற பெயருடன் என் மனைவியே அங்கு விதை விதைக்க வந்திருப்பதை முன்பே அறிவேனாகையினால் நான் அதற்கு முன் ஜாக்ரதையாகவே வந்தேன். இதற்கு முன்பே நான் என் பெயர் குறிக்காமல் உத்தமருக்கு ஓர் கடிதம் எழுதி னேன். அதில் அவரை ஜமாபந்தியில் கொல்ல வந்த ரகஸியத்தைக் குறிப்பிட்டிருந்தேன். இக் கூட்டத்தில் ஒருவன் இன்பமணியின் பிதாவாகச் சென்று நடித்து உத்தமரைக் கொன்று மணியை அப கரிக்க எண்ணிய சதியாலோசனையை நான் அறிந்துகொண்டேன். அதற்கு இடங் கொடுக்காமல் அக் காரியத்தை நானே செய்து காப்பாற்றவேண்டுமென்று இப்படி வந்தேன்.

இரவில் நான் உத்தமர் அறியாவண்ணம் அவர் அறையினருகி

லேயே இருக்கத் தீர்மானிருந்தபடியே அன்று சென்றேன். இப்போது உத்தமர் சொல்லியபடி சம்பாஷணைகள் நடந்ததை நான் தூரவிருந்து கேட்டேன். உடனே பயம் குலுக்கிவிட்டது. விளக்கு பெரியதாக எரிவதால் நான் உள்ளே பகிரங்கமாகச் செல்ல முடியவில்லை. அவர்கள் கதவின் புறம் முதுகு காட்டி நின்றதால் நான் கீழே படுத்து மாரால் நீந்தியபடியே கடவுளை வேண்டிக்கொண்டு மெல்ல உத்தமரின் கட்டிலருகில் சென்று கட்டிலின் கீழ் புகுந்து கொண்டேன். மேற்படி சம்பாஷணைகள் முடிவதற்குள் விளக்கு ஸ்விச்சைக் கண்டுபிடித்து சடக்கென்று அணைத்துவிட்டேன்.

அடுத்த விநாடியே இருள் சூழ்ந்துவிட்டது. அதற்குள் உத்தமருக்கு மயக்கம் கொடுத்து ஊசியும் ஏற்றிவிட்டதாகப் பிறகு தான் அறிந்தேன். மெத்தையிலிருந்து கட்டிலின் கீழே அவரை நான் ஒரே புரட்டலாகப் புரட்டி தள்ளிவிட்டு "அதோ! அதோ! யாரோ வருகிறார்கள்" என்று மெல்ல நான் கூறினேன். அதே சமயம் இருவர் வரும் காலடிகளும், அவர்கள் திரும்பிச் சென்று டப், டப்பென்று சுட்ட சத்தமும் காதில் விழுந்தது.

இதற்குள் நான் அக் கட்டிலின் பக்கத்திலேயே உள்ள சிறு அறைக் கதவை மெல்ல திறந்துகொண்டு அங்கு பாத்ரூமிருக்கிறது. அந்த அறைக்கு உத்தமரை—எப்படித் தூக்கிச் செல்ல ஈசன் எனக்குப் பலங் கொடுத்தாரோ தெரியவில்லை அவரைத் நான் தூக்கிக் கொண்டு சென்றுவிட்டேன் அங்கு சுத்தம் செய்வதற்கு வேலைக்காரன் வரும்வழியாக பின்புறத்திற்கு மெல்லத் தூக்கிக்கொண்டு போய் தோட்டத்து வழியே வெளிக் கிளம்பினேன்.

பெரியவராகையினால் என்னால் தூக்கவும் முடியவில்லை. என்ன செய்வது ஈசா! இதுவரையில் நாம் கஷ்டப்பட்டும் பலனில்லாது அவர்கள் வந்து பிடித்துவிடப் போகிறார்களே என்று பயந்து நடுங்கி செல்லுமிட மறியாது தத்தளிக்கையில் இந்த மகானுபாவர்களாகிய நாயுடுவும், அம்புஜமும் ஏதோ கேஸ் விஷயமாக அலைந்துவிட்டு அவ் வழியே சென்றார்கள்.

ஆள் நடமாட்டமில்லாத சந்தில் திருடனைப்போல நான் ஒரு ஆளைத் தூக்கிச் செல்வதைக் கண்டதும் காரை நிறுத்திப் பிடித்துக்கொண்டார்கள். நாயுடு என்னை மிரட்டினார். நான் அவரை இன்னாரென்று தெரிந்துகொண்டு அவரிடம் சகல விஷயமுங் கூறி சரணம் புகுந்தேன். எங்களை அந்த காரிலேயே அழைத்துச் சென்று, எங்களை ரகஸியமாகத் தன் வீட்டிற்கே கொண்டுபோய் பந்தோபஸ்தான இடத்தில் வைத்துவிட்டார்.

நாயுடுவும் இந்த அம்மாளும் "நாங்கள் கூறும்வரையில் நீங்களிருவரும் வெளிக் கிளம்பக்கூடாது. ரகஸியத்திலேயே இருங்கள். மேற் குறித்து நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்று திட்டம் செய்து விட்டார்கள். வீட்டில் இவருடைய மனைவியும், மகளும் இருக்கிறார் களே அவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டால் என் செய்வது? அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றேன்.

அதற்கு நாயுடு "அவர்களையும் இங்கு கொண்டுவந்தால் காரி யம் கெட்டுவிடும். ஆபத்து இல்லாத வழியை நாங்கள் பார்த்துக் கொள்வோம்; பயப்படவேண்டாம். உத்தமர் பந்தோபஸ்தி லிருப்ப தாகத் தெரியவேண்டாம். நீங்களிருவரும் சிறையிலேயே இருப்ப தாக அவர் நினைக்கவேண்டும். வேளா வேளைக்கு ஆகாரம் வரும்; சாப் பிட்டுவிட்டுச் சில தினங்களிருங்கள். பிறகு ஜெயம் பெறலாம்" என்று உறுதி கூறினார்கள். அதன் பிறகு இன்று இவ் வேஷத்தில் வந்ததுதான் எங்களுக்குத் தெரியும்." என்றார்.

வாஸுவும், மணியும் நாயுடுவை நோக்கி, "ஐயா! நாங்கள் கோரும் பொருளை நீங்கள் வைத்துக்கொண்டுதானா எங்களை அழ வைத்தீர்கள். ஒன்றும் தெரியாதவர்போல நடந்தீர்கள். ஏன் உத்த மரை அப்போதே எங்களுக்குக் காட்டி இருக்கலாகாது?" என் றார்கள்.

நாயுடு:—அப்படிக் கேளுங்கள். நான் அப்போதே காட்டி இருந்தால் காரியம் அன்றே குட்டிச்சுவராகவன்றோ போயிருக்கும்? இத்தனை கூட்டத்தையும் பிடிக்கமுடியுமா? எல்லாவற்றிற்கும் யுக்தி செய்துதான் அவ்வாறு செய்தேன். இதோ இருக்கும் ஸ்ரீமணி சில தினங்களுக்கு முன்பு எங்களிடம் ஓடோடியும் வந்து காலில் விழுந்து முறையிட்டாள்.

அதாவது வேலை காலி இருப்பதாகப் பத்திரிகையில் விளம்பரத் தைப் பார்த்து அவ்விடம் சென்றாளாம். அங்கு உண்மையில் ஆபீஸ் இருப்பதாக எண்ணிச் சென்றதற்கு மாறாக ஓர் கிராதகன் இவளைத் தனித்தவிடத்தில் வந்து உபத்திரவித்தானாம். இவள் உடன் படாததால் இவளை ஓர் சிறைச்சாலையி லடைப்பதுபோல அடைத்து மிக மிக இம்சை செய்தானாம். தனக்கு உடன் படாவிட்டால் கங் காணியுடன் வெளியேற்றிவிடத் துணிந்துவிட்டானாம்.

இம் மங்கை மகா சாமார்த்தியசாலி. வெகு கெட்டிக்காரி யானதால் தீர்க்கமாக யோசனை செய்தாளாம். தான் இச்சமயம் எத் தகைய பாடாவது—இம்சையாவது—அனுபவித்து இக் கூட்டத்

தைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற தீவிரமான எண்ணம் உதித்து விட்டதாம். சிறையிலேயே தான் கிடந்தால் அங்குள்ள விஷயங்கள் தெரியாமல் போய்விடுமாதலால் தான் வெளியேறி விஷயத்தை யறிந்து தக்க வழி செய்யவேண்டு மென்று தீர்மானித்தாளாம்.

சில தினங்கள் சென்றதும் அந்த மனிதன் வந்தபோது தான் திடீரென்று மாறிவிட்டதாயும் அவன் மீது தனக்குக் காதல் ஜெனித்துவிட்டதாயும் அபினயித்துக் கூறினளாம். தன் சகோதரி களும், சகோதரர்களும் கிழவரும் என்ன கதி யானர்களோ! எப்படி இருக்கிறார்களோ! தன்னைப்பற்றி என்ன நினைத்துத் தவிக்கிறார் களோ வென்ற விசனம் ஒரு புறம் வாட்டுகிறதெனினும் தான் தன் மனுஷ்யர்களுக்கே பாசத்தினல் உழைத்து, உடல் மெலிவதை விட துஷ்டர்களால் துன்பப்படும் மற்றவர்களின் துயரங்களைத் தீர்க்கவும் இனி இவர்களால் பிறருக்கு உபத்திரவம் நேராமலிருக்கவும் வேண் டிய உதவியைச் செய்தால் எத்தனையோ நன்மைகள் உண்டாகும். இதற்காக தன்னைத் தான் ஒரு பொருட்டாக நினைக்காமல் தன் வாழ்க்கையைத் தியாகம் செய்து விடுவதே சரி என்று துணிந்து விட்டதால் அவனை மணந்துகொள்ள இசைந்து விட்டாளாம்.

அவனும் மெத்த சந்தோஷத்துடன் இவளை வெளியில் அன்றே தாராளமாக உலாவ விட்டதோடு மறுதினமே தன் கூட் டங்கள், பரிவார சகிதம் விவாகத்தை முடித்து விட்டானும். சர்க்கரை தன் உருவத்தையே மறைத்துக்கொண்டு பிறருக்குத் தன் சுவையைக் கொடுத்து உதவுவதுபோலத் தானும் பெரிய த்யாகம் செய்ய நினைத்ததானது மிகவும் போற்றத்தக்கது. பிறகு விவாகம் முடிந்ததும், ஸ்ரீமணி ஓர் யுக்தி செய்தாளாம்.

"என் தாயார் இறக்கும்போது ஒரு வார்த்தை சொல்லிச் சென்றாள். அதாவது நான் பிறந்த உடனே ஓர் பெரிய ஜோஸியர் என்னைப் பார்த்ததும் எனக்கு ஏதோ ஒரு பலமான தோஷமிருப்பதாயும் அதை நிவர்த்திக்க சில மந்திரங்கள், பூஜை, ஜெபம், தபம் செய்ய வேண்டுமென்றும் அப்படிச் செய்யத் தவறி ஞல் விவாகமாகி ஒரு மாத காலம் கணவனும் மனைவியும் சம்மந்த மின்றி இருந்து, கோயிலைச் சுற்றினல் போதும் என்றும் அவ்வாறு இரண்டும் செய்யாவிட்டால் கணவன் 10 தினத்திற்குள் இறந்து விடுவான் என்றும் கூறினராம். ஆகையால் என் தாய் "நான் உன் னைப் பரதேசியாக விட்டுச் செல்கிறேன்; அனதையாகிய உன்னை நீயே கவனித்துக் கொள்ளு" என்று சொன்ன தேவவாக்கு என் மனத்தில் பசுமரத்தாணிபோலப் பதிந்திருக்கிறது.

நாதா! நான் என்னுடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தங்களுக்குத் தத்தம் செய்து விட்டேன். இனிமேல் தாங்கள் சுகமாக சிரஞ்சீவியாக இருந்தாலல்லவோ எனக்கு வாழ்க்கையும், களிப்பும் உண்டு. நான் தங்களுடன் சகலமான காரியங்களையும் செய்கிறேன். என்னை சமீபத்திலுள்ள கோயிலில் சுற்றுவதற்கு அழைத்துச் செல்லுங்கள். ஒரு மாதம் ஒரு நிமிடமாகப் போய்விடும். நாதா! மேலும் நான் தங்கள் நாயகியல்லவா! என்னை எல்லோரும் எஜமானி யாக நடத்த வேண்டும். எஜமானி என்றே அழைக்க உத்திரவிட வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டாளாம்.

அந்த ஆசாமியின் மூளையே குளிர்ந்து விட்டதாம். "ஆகா! அப்படியே செய்யலாம். இதோ இதற்கு அடுத்த அம்மன் கோயிலை நாம் இருவருமே தினம் சுற்றுவோம். உன்னை எஜமானி என்றழைக் காமல் வேறு யாரை யழைப்பது? பயப்படாதே" என்று தேற்றி ஞனும். அவன் அங்கில்லாத சமயங்களில் அவ்விடம் முற்றும் சுற் றிப் பார்ப்பதும், பெட்டிகளை எல்லாம் கிளறிப் பார்ப்பதுமாக அங் குள்ள சகலமான உளவையும் இரண்டே தினத்தில் தெரிந்து கொண்டாளாம்.

அங்கு இந்திரா அண்டு கம்பெனி என்று போர்டு மட்டும் மாட்டிக்கொண்டு அதில் வெளியார் பார்ப்பதற்கு ஏதோ வேலை நடப்பதுபோல சிலவற்றைக் காட்டிவிட்டு அங்கு வரும் மனிதர்க ளில் ஆணுயினும், பெண்ணுயினும் அவர்கள் நல்ல வேலைக்காரர்கள் தானு! எந்த தொழில் தெரியும் என்பதை அறிந்துகொண்டு அவர் களை ஹெட்டாபீஸான மலைக் குகைக்கு மாற்றி விடுவதும், உப யோக மற்றவர்களை கங்காணிக்கு விற்று விடுவதும் அதிலும் சிலரை இங்கு வேலை செய்யும் ஆட்களின் பொருட்டு அனுப்பி விடுவது மான வேலைகள் நடத்தும் கிளையாபீஸாக இருப்பதைக் கண்டு கொண்டாளாம். கங்காணியர் வருவதையும் அவர்களிடம் ஆளை மயக்கித் தியக்கி ஆயிரமாயிரமாகப் பணம் வருமென்று பொய் புரைத்து வஞ்சகமாக அனுப்பும் கண்ராவியைக் கண்டு சகிக்க முடியவில்லையாம்.

அந்த மகானுபாவன் "கண்ணே! இதெல்லாம் என்னவென்று விநோதமாகப் பார்க்கிருயா! எல்லாம் பணம்தான் தெரியுமா! உன் சுகத்திற்குத்தான்" என்பானும். அதையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டே இருந்தாளாம். பிறகு அம்மன் கோயில் சுற்றலுக்குத் தானே அழைத்துச் சென்றுனும். முதல் நாள் ஒழுங்காகச் சுற்றி விட்டு வந்துவிட்டாளாம்.

மறு நாள் சுற்றும்போது அவன் ஏதோ பலாக்காக விருக்கையில் அந்த கோயிலின் உட்புறத்தில் திடீரென்று புகுந்துகொண்டாளாம். அந்த மனிதன் "ஸ்ரீமணீ! ஸ்ரீமணீ!" என்று கூப்பிட்டானும். சுற்று முற்றும் தேடினனும். அவனுக்குண்டான திகிலைக் கேட்க வேண்டுமா! பூசாரி கோயிலின் ஒருபுறமாக ஏதோ பாத்திரம் சுத்தி செய்துகொண்டிருந்தானும். ஆதலால் உள்ளே அவள் சென்றதைக் கவனிக்கவில்லை. அந்த ஆசாமி வெகு ஆத்திரத்துடன் நாற்புறமும் தேடிவிட்டுக் கோயில் மூலஸ்தானத்திற்குள் நுழையப் போனனும்.

அதற்குள் பூசாரி "பேஷ்! யாரையா நீர்? இங்கு தடதடவென்று உள்ளே போகிறீர்? இது கோயில் என்று தோன்றவில்லையா! காலை வெளியே எடும். நீர் தேடும் பெண்பிள்ளையை இங்கு அம்மன் விழுங்கிவிட்டாளா என்ன? பத்திரம்." என்று அதட்டினனும். முரடன் அதைக் கேளாது எட்டிப் பார்த்துவிட்டு வெகு மனக் கலக்கத்துடன் "ஆகா! மோசம் வந்தது" என்று நினைத்து ஓட்டமெடுத்தானும்.

அந்த அம்மன் கல்சிலை யாகையினல் "அம்பா! நீதான் துணை" என்று அந்த சிலையின் பின்புறம் ஒட்டிக்கொண்டு நின்று விட்டாளாம். கற்பூராரத்திகளும், நைவேதனங்களும் நடந்தனவாம். இரவு ஒன்பது மணி சுமாருக்கு பூசாரி பீக முத்திரை செய்யப் போனனும். அப்போது இந்த இளமங்கை அவனை யழைத்தால் என்ன கலபை நேருமோ! ஒருகால் அந்த பாதகன் இவ்விடத்திலேயே சுற்றிக்கொண்டிருந்தாலு மிருக்கலாம். என்ன செய்வதென்று யோசனை செய்தாளாம். ஆயினும் இராக்காலத்தில் சக்தி ஸ்வரூபியின் பின்னலேயே நிற்கவும் பயமா யிருந்ததாம்.

ஆதலால் மெல்லிய குரலில் "ஐயா! பயப்படாதீர்கள். கூச்சலிடாதீர்கள். அம்மன்மீது ஆணையாக நான் தங்களை நம்புகிறேன். என்னைக் காப்பாற்ற வேண்டும். விவரம் பின்னல் விவரமாகக் கூறுகிறேன். தாங்கள் என்னை எவ்விதமாவது தம் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும். என்னைக் கண்டு பயப்படவேண்டாம். நான் ஓர் அனுதைச் சிறுமி. அப்போது இங்கு தேடியவன் ஓர் கள்வன். என்னைக் கெடுக்க எண்ணியதால் நான் இங்கு புகுந்து கொண்டேன்." என்று மெல்ல அவனெதிரில் வந்து கெஞ்சிக் கேட்டு காலில் விழுந்து வணங்கினளாம். முதலில் பூசாரி பயந்து, நடுங்கி நம்பாது திகைத்தானும்; பிறகு நம்பினனும்.

அவன் தயவு வைத்து "அம்மணி! பயப்படாதே; என் வீட்டிற்கு என்னோடு வந்துவிடு." என்றானும். "ஐயோ! நான் இப்படியே வந்தால் யாரேனும் என்னைக் கண்டுபிடித்துக் கொள்வார்கள். ஆதலால் இதோ உலர்ந்தியுள்ள உடையைத் தாரும் என்று வாங்கி ஆண்வேடமணிந்து அவருடன் வீட்டிற்குச் சென்று அவர் காலில் விழுந்து வணங்கி சகல விஷயத்தையும் ஆதியோடந்தமாகக் கூறி முடித்தாளாம்.

அந்த பூசாரி இதைக் கேட்டதும் "அடாடா! கதிர்வேலுவின் மகளா நீ! அவர் அடிக்கடி இக்கோயிலுக்கு வருவாரே பாவம். ஐயோ! நீ இக்கதியில் அவதிப்படுவது யாருக்குத் தெரியும்? மோட்டாரில் அறைபட்டு இறந்துவிட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதே விசனத்தினால் கதிர்வேலும் இறந்துவிட்டாராம். இப்போது அவருடைய சினேகிதன் கோவிந்தனென்பவர் மற்ற குழந்தைகளை உத்தமரின் அனாதை யாசிரமத்தில் விட்டிருக்கிறாராம்." என்று பழங்கதைகளை எல்லாம் கூறக் கேட்டதும் அப்படியே அலறித் தவித்தாளாம்.

ஏற்கெனவே தன் தந்தையையும் உடன்பிறந்தோர்களையும் பற்றி நினைத்துக் கலங்கிக்கொண்டிருக்கையில் பின்னும் அபாரமான விசனத்தினால் கதறினாளாம். அதற்குமேல் என்ன செய்வதென்று தன்னை யொருவாறு தேற்றிக்கொண்டாளாம். தான் இறந்துவிட்டதாகத்தீர்மானிக்கப்பட்ட விஷயம் அப்படியே ஊர்ஜிதமாகிவிடட்டும். தன் பிதாவை என்னவோ பறிகொடுத்தாகிவிட்டது. இம்மையில் காண்பதற்கில்லை. சகோதர, சகோதரிகளும் நல்ல பாதுகாப்பிலிருப்பதால் அதனாலுங் கவலை இல்லை. நாம் மறைந்தபடி இருந்துகொண்டே இவர்களின் கூட்டத்தை மூட்டைப் பூச்சியைப்போல் நசுக்கிவிட்டு மறுகாரியம் பார்க்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாளாம். இக்கருத்தையே அப்பூசாரியிடமும் தெரிவித்து இதை வெளியிடாமலும், தன்னைக் காட்டிக் கொடாமலும் உதவிபுரிய வேண்டுமென்று காலில் விழுந்து வேண்டிக்கொண்டாளாம்.

அப்பூசாரி உண்மையிலேயே மிகவும் நல்லவரும், தயாள சிந்தையும் உடையவர். பிறருக்குத் தீங்கு கனவிலும் எண்ணமாட்டார். எல்லோரும் ஒன்றாக வாழ்வதே அம்மனின் திருவுள்ளம். அதுவே அடியேனின் பிரார்த்தனை என்று என்னிடம் பலதரம் கூறியிருக்கிறார். அவரும் இதற்கு இசைந்து வாக்குறுதி யளித்தாராம். பிறகுதான் ஸ்ரீமணியின் மனம் சற்று தேறியதாம்.

அந்த பூசாரியின் மகன் ரொட்டி வியாபாரம் செய்கிறவராம்,

அவரும் தகப்பனாரைப் போலவே உத்தம குணமுடையவராம். அவருடைய மனைவி சர்வ கர்னாடகப் பேர்வழியாம். அவள் இக்காலத்து பெண்களைப்போன்று படிக்கவும், தைரியமாய் சகல காரியங்களையும் செய்யவும் வேண்டுமென்று அவர் ஆசைப்படுபவர். அவர் எத்தனை திருத்தியும் அவள் கேட்கவில்லை. ஸ்ரீமணியே அதற்கு குருவாக வமைந்தாள். ஸ்ரீமணி அப் பெண்மணியுடன் பேசிக்கொண்டு அவளுக்கும் சந்தோஷமாக விருக்கும்படியாக நடந்து கொண்டாளாம். அப்படியே இரண்டொருநாள் வெளியில் வராமலேயே அடைபட்டிருந்தாளாம். அம்மாதிரி இருப்பது அவளுக்கு மிக்க கஷ்டமாகவிருந்ததாம்.

தன் கடையிலிருந்து தான் ரொட்டி அனாதை யாசிரமத்திற்கு வாடிக்கையாக வாங்குகிறார்கள் என்று ரொட்டி வியாபாரியான சீதாராமன் கூறக் கேட்ட ஸ்ரீமணிக்குத் தான் எப்படியாவது இதை யொரு சாக்காக வைத்துக்கொண்டு தனது அருமைச் சகோதரிகளை, சகோதரர்களைப் பார்க்க ஆவலுண்டானதால் இதை அவரிடம் தெரிவித்தாளாம். அவர் அதற்கு இசைந்ததால் அவள் தினம் ஆண் உடையுடன் அங்கு ரொட்டி கொண்டு செல்லும் கிழவனுடன் போய்ப் பார்த்துக் களித்து வந்தாளாம். அந்த குழந்தைகளும் இவளை உண்மையிலேயே ஆண் பிள்ளை என்றே எண்ணிவிட்டார்களாம்.

பிறகு என் விஷயத்தைப் பூசாரியின் மூலமாகத் தெரிந்து கொண்டு அவருடைய துணையோடு என்னிடம் வந்தாள். இவைகளைத் தெரிவித்து இக் கூட்டத்தைப் பிடிக்கவேண்டுமென்று என்னை வேண்டிக்கொண்டாள் அதைக் கேட்டதும் இத்தகைய கிராதகர்களும் உலகிலிருக்கிறார்களே என்று வியப்புற்று இம் மங்கைக்குத் தேறுதல் கூறினேன். "நான் விஷயங்களைக் கண்டுபிடிக்கும்வரையில் நீ பூசாரியின் வீட்டிலேயே ஆணுடையிலேயே மறைந்துகொண்டிரு. அப்படி இல்லையெனில் என் மகள் அம்புஜத்தின் வீட்டிலிருந்து அவளுடைய வீர தீரத்தை நீயும் பழக்கிக்கொள்ளு. நான் உன்னுடைய அரிய தியாகத்திற்கும், யோசனையுள்ள—தீவிரமான—புத்திக்கும் மெச்சுகிறேன். ஜாக்ரதை! வெளியில் அகப்பட்டுக் கொள்ளாதே" என்று தேறுதல் கூறினேன்.

அன்று முதல் நான் பலமாக உழைக்க வாரம்பித்தேன். சில சமயத்தில் ஸ்ரீமணியையே நான் கூட அழைத்துக்கொண்டு சென்று சில விஷயங்களைக் கவனித்திருக்கிறேன். இப்படி யிருக்கும் நாளில் தான் உத்தமரையும், கோவிந்தனையும் நடு நிசியில் கண்டதும், அவர்களை பந்தோபஸ்தான இடத்தில் வைத்ததும். நான் என் உத்தமரிருக்கு மிடத்தை உங்களுக்கும் கூறாமல் உத்தமருக்கும் அவர்

என்னிடம் தானிருக்கிறார் என்பதையும் தெரிவிக்காதிருந்தேன் என்றால், அப்படி நான் தெரிவித்திருப்பேனேயாகில் சகல காரியமும் கெட்டுப்போய் ஒவ்வொருவருடைய உயிருக்கும் ஹானி வந்திருக்கும் என்பது நிச்சயம்.

உத்தமரோ மகா தர்மப்பிரபு. அவருடைய மனத்தினால் கூடப் பிறருக்கு ஒரு தீங்கு செய்யமாட்டார். அவர் தன்னுபீஸ் அதிகாரியான உத்யோகஸ்தருக்காகத் தானே பழியைச் சுமந்து அவரைக் காப்பாற்றுகிறேன் என்று கொடுத்த வாக்குறுதியை நான் இப்போதல்ல; அப்போதே அறிவேன். எப்படியெனில் அதே மனிதரின் தந்தையும், மனைவியும் இவ் விஷயத்தைக் கூறி முறையிட்டு என்னுடைய உதவியைக் கோரினார்கள். நான் விஷயங்களை மட்டும் க்ரகித்துக்கொண்டு ஒருவாறு பதில் உரைத்து அனுப்பிவிட்டேன்.

அதற்குப் பிறகு அக்கூட்டத்தவர் கும்பலாக வந்தார்கள். அவர்களுடைய கருத்தே என்னை ஒழித்துவிட வேண்டுமென்பதல்லவா? அதை நான் ஒரு நொடியிலறிந்தேன். அதற்கானபடி அவர்களுக்குப் பதில் கூறினேன். உத்தமர் தான் சிறையில் துஷ்டர்களின் செய்கையினாலேயே இருப்பதாக நினைத்திருந்தால்தான் "நான் என்ன செய்வது ஈசன் விட்டவழி" என்று தியானத்துடன் சும்மாவிருப்பார். என்னிட மிருப்பதாகத் தெரிந்தால் என்னைத் தொந்திரவு செய்து தானே வெளிப்போந்து காரியத்தைக் குட்டிச் சுவராக்கித் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றி இருப்பார். துஷ்டர்களைத் தண்டிப்பது கடமையே யன்றி அவர்களுக்கு ஆதரவு கொடுப்பது பெரும்பாவமல்லவா! அதையும் அவர் நினைக்கவில்லை.

மேலும் உங்களிருவருக்கும் அவர் உயிருடன் என்னிடமே இருக்கிறார் என்று நான் கூறியிருப்பேனே யானால் நீங்கள் என்ன தான் அடக்கி வேஷம் போட்டாலும் அந்த சந்தோஷம் உங்கள் முகத்தில் ஜ்வலித்தே விடும். அதை யறிந்த துஷ்டர் வெறுமனேயிருப்பார்களா? பேராபத்தாக முடிந்திருக்கும். அவரைக் காணாமலிருக்கையிலேயே இவர்கள் ஒரு புறம் பேச வாரம்பித்தார்கள். ஒரு புறம் நீயே கொலைசெய்துவிட்டதாக வழக்கும் தொடுக்க வாரம்பித்தார்கள். ஒருபுறம் குழம்பியும் தவித்தார்கள். இவைகளை எல்லாம் உத்தேசித்தே நான் தெரிவிக்கவில்லை. நீங்கள் நாட்கள் கஷ்டப்பட்டாலும் ஒரே அடியாக துஷ்டர்களைப் பிடித்து விடலாம் என்பதே என் கருத்து. அதற்காகவே நான் பேசாமலிருந்ததோடு, அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டது போலவும் ஜாலம் செய்தேன்.

உத்தமர் குகையிலிருப்பதாய் இவர்கள் பொய்க்கதை கூறிய

தாகச் சொன்னீர்களே! அப்போது நான் என்ன சொன்னேன். நீங்கள் போகவேண்டாமென்று இதற்குத்தான் கூறினேன். உங்களுடைய பழய ஆட்களை நீக்கிப் புதிய ஆட்களை அவர்கள் வைத்த போது என்னுடைய ஆட்களில் இருவரை உளவறியப் புகுத்திவிட்டேன். உங்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் உடனே எனக்குத் தெரிவிக்கவும், அதைத் தடுக்கவும் ஏற்பாடு செய்தேன். அதற்குப் பிறகுதான் நான் அகப்பட்டுக்கொண்டதுபோல அவர்களுடன் சென்றேன். பிறகு அம்புஜம்தான் மிச்ச வேலையைச் செய்தவள்.'' என்று கூறி முடித்தார்.

உடனே அம்புஜம் "என்ன அப்பா! மிச்ச வேலை என்ன விருந்தது? நீங்கள்தான் பசுவைக் கறந்து, பாலைக் காய்ச்சி, புரைகுத்தி தயிராக்கிக் கடைந்து வைத்துவிட்டுச் சென்றீர்கள். அதற்குப்பிறகு அந்த வெண்ணெயைச் சிதறாது எடுக்கவேண்டியதுதானே மிச்சமிருந்தது. நீங்கள் சென்ற பிறகு அந்த வண்டியைத் தொடர்ந்து வந்து உங்களுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடித்துக்கொண்டு சென்றேன்.

நமது ஸ்ரீமணியை நான் அதற்கு முன்பே என்னிடமே அழைத்து வைத்துக்கொண்டு சில விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தேன். அந்த ரொட்டிக்காரர் நமக்கு வெகு உதவி செய்தார். முதலில் அசடாகவிருந்த அவருடைய மனைவியை ஸ்ரீமணி வெகு விரைவில் தயார் செய்துவிட்டதன் பயனாக அவளை நமக்கு உதவியாக அழைத்து வந்தாள். அவளிடம் நடந்துகொள்ளவேண்டிய விஷயங்களைத் தெரிவித்து அந்த கூட்டத்தவரின் தயவைத்தேடுபவள் போல நடிக்கச் செய்து வேலைக்காரியாக அனுப்பினேன். ஏனெனில் ஜெயிலிலிருந்து வந்த கேடி என்றால் அவர்களுக்கு சந்தோஷம். பயமின்றி எடுத்துக்கொள்வார்கள். ஆதலால் அவளை ஜெயில் கேடியாக அனுப்பினேன். அவளும் வெகு சாமர்த்தியமாக நடித்து அங்குள்ள விஷயங்களை அவ்வப்போது தெரிவித்து வந்தாள்.

இன்பமணி தன்னை விவாகம் செய்துகொள்வதற்காக உத்தமர் எழுதிய கடிதம் போல பொய்க் கடிதம் எழுதிக் காட்டி அவளை பயமுறுத்தியதையும், ஓலகாம்பாள் பாசாங்காக ஓடிவந்து அவளுடைய உதவியை நாடுவது போலச் செய்து அவளுடைய வாயில் வரும் வார்த்தையை வாங்குவதற்காக அவர்களனுப்பிய செய்தியையும் அம்மாது மூலமாக உணர்ந்தேன். உடனே ஒரு யுக்தி தோன்றியது. இவள் விவாகம் செய்துகொள்வதாக இசைந்தால்தான் அந்த விவாக சந்தர்ப்பத்தில் எல்லோரும் ஒன்றாகக் கூடுவார்கள்; அப்போது எல்லோரையும் சேர்ந்தாற்போலப் பிடிக்கச் சந்தர்ப்பம் வாய்க்குமென்று எனக்கு உறுதியாகத் தோன்றிவிட்டது.

ஆதலால் நான் அந்த ரொட்டி வியாபாரியின் உதவியால் அதற்குள் சிறு டப்பியை வைத்து ரொட்டி மாவை இருபுறமும் மூடி வேகவைத்து அதன் மேல் பாகத்தில் ஒரு அடையாள மிருக் கும்படியாகச் செய்து அந்த ரொட்டியை அந்தப் பெண் மூலமாக இன்பமணிக்கு அனுப்பினேன். தாங்கள் முன்னதாகவே சுட்டோ, அடித்தோ செய்துவிட்டால் அது தெரிந்து காரியம் சிதறிவிடும் என்றதனாலேயே அப்படி எழுதினேன். விவாகத்திற்கு இன்பமணி இசைந்துவிட்டதையும், அவர்கள் தடபுடலாக விவாகத்திற்குக் கோடிப்பதையும் அப் பெண் மூலமாக அறிந்தேன்.

இவ் விஷயங்களைப் போலீஸ் அதிகாரிக்குத் தெரியப்படுத்தி அவர்களுடைய உதவியைக் கூட நாடி நான் சொல்கிறபடி செய்ய வேண்டினேன். அவரும் முழு மனத்துடன் இசைந்தார். எந்த பாண்டு மேளத்திற்கு அவாகள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை உளவறிந்து அவர்களுக்குத் தகவலைக் கூறி எங்களுக்கு இசையும் படியாகப் போலீஸார் முன்பே செய்துவிட்டேன்.

இங்கிலீஷ் பாண்டு, இந்தியன் பாண்டு இரண்டிலும் ஆயுதங் களைக் கையிலேந்திய போலீஸாரைத் தயாரித்தேன். நாட்டியத்திற் கும், சதிர் கோலாட்டத்திற்கும் ஏற்படுத்தியிருந்த மனிதர்களிட மும் இப்படியே சென்று அவர்களையும் என் வசப்படுத்தி நம்மவர் களுக்கே அவ் வலங்காரங்களைச் செய்து அவர்களையும் தயார் செய் தேன். ஆசிரமத் தலைவியையும் சில குழந்தைகளையும் அப்படியே வேஷத்துடன் அழைத்து வந்தேன்.

அக் கூட்டத்தினரே தயார் செய்த மோட்டார்களில் நாங்கள் எல்லோரும் இங்கு வந்து சேர்ந்தோம். உத்தமருக்கு தாய்க் கிழவி வேஷம் போட்டுக்கொள்ளச் செய்தபோதும் உண்மை தெரியாது. அப்போதுதான் சகலமான விவரங்களையும் கூறி நடிக்கக் கற்றுக் கொடுத்தேன். அவரும் அதன்படியே நடந்துவிட்டார். அதற்கு மேல் நிகழ்ந்த வைபவங்கள் முற்றும் நேரில் பார்த்துவிட்டீர்கள். இதுதான் என் வேலை.'' என்று முடித்தாள்.

இச் சகலமான வரலாற்றினையும் கேட்ட உத்தமரின் ஆச் சரியம் கரை புரண்டு விட்டது. கோவிந்தனுக்கும் அதற்குமேலாகி விட்டது. "அம்மா! அம்புஜா! ஐயா! நாயுடுகாரு! நீங்களிருவரும் சாதாரண மனிதரல்ல. தேவாம்சந்தான் என்று நிச்சயமாகக் கூறு வேன். என்னுடைய மனம் அடையும் சந்தோஷத்தைக் கூறவே முடியாது'' என்று கூறி, அவ்விருவரையும் தட்டியும், தடவியும் கொடுத்தார்.

அங்கிருந்த மற்ற இடங்களை எல்லாம் பார்த்தார்கள். அங்கு சாமியாராக விருந்த மெழுக்கு பொம்மையைக் கண்டு நகைத்தார்கள். சாமியார் கண்ணில் சிறிய எலெக்ட்ரிக் பல்பு வைத்திருந்தது. அதற்கு பாட்ரி வைத்திருந்தது. அதை யமுக்கினல் கண்ணைத் திறந்திருப்பதுபோல வெளியிலிருப்பவருக்குத் தோன்றும். அவ் வுருவத்தை இருட்டான இடத்தில் வைத்திருந்தது. மரத்தினல் ஒரு உருவம் செய்திருந்ததைக் கண்ட நாயுடு அதை ஆட்டியும், தடவியும் பார்த்தார். கனமாக விருந்தது கண்டு அதன் ஒவ்வொரு அங்கமாகக் கூர்ந்து கவனிக்கையில் கழுத்துப் புறம் வித்யாசமாகத் தெரிந்தது.

உடனே அதன் கழுத்தைத் திருப்பிப் பார்க்கையில் திருகு போலக் கழன்று விட்டது. அதை எடுத்த உடனே அப் பொம்மையின் உடல் ஓர் பெட்டிபோல விருந்தது. அதனுள் டார்ச்சு லைட்டைப் போட்டுப் பார்த்தால் நூற்றுக் கணக்கான பவுன்களும், சில நகைகளும் இருப்பதை போலீசார் உள்பட எல்லோருக்கும் காட்டினர். இதைப் பார்த்த எல்லோரும் பேராச்சரியத்தில் மூழ்கி "ஹா! என்ன ஆச்சரியம்! என்ன சாமர்த்தியம்" என்று மூக்கில் விரலை வைத்துக் கொண்டார்கள்.

அதைக் கண்ட அம்புஜம் "தந்தையே! பகவான்சிங்கு கம்பெனியில் 200 பவுன்களும், சில நகைகளும் கொள்ளை போய் விட்டதாகப் பத்திரிகையிலும் படித்தோம். அந்த சிங்கு நம்மிடமும் வந்து உதவியைக் கேட்டாரே! அந்த நகைகளும், பவுன்களும் இவையாக விருக்கலாமல்லவா! ஆம். அந்த சிங்கின் நகைகளுக்கு B. S. என்ற முத்திரை இருக்குமென்று கூறி இருக்கிறார். அது இந்த நகையி லிருக்குமாயின் இது அக் கம்பெனியினுடையது தான் என்று கூறியவாறு நகையை எடுத்து உற்றுக் கவனித்ததில் B. S. என்று எழுத்துக்கள் செதுக்கப்பட் டிருந்ததை எல்லோருக்கும் காண்பித்தாள்.

போலீஸ் அதிகாரி இந்த அற்புத ஆராய்ச்சியைக் கண்டு அபார சந்தோஷ மடைந்து உடனே இன்ஸ்பெக்டரை யனுப்பி பகவான் சிங்கை அழைத்துவரச் சொன்னர். சிங்கும் இந்த அதியாச்சரியத்தைக் கண்டு அபாரமான சந்தோஷமும் வியப்புமடைந்து இவையாவும் தன்னுடையதே என்று கூறினர். பிறகு மற்ற அதிசயங்களை எல்லாம் பார்த்து அங்குள்ள கூட்டத்தினர்களை எல்லாம் விலங்குடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு மற்றவர்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு எல்லோரும் உத்தமரின் பங்களாவிற்கு வந்தார்கள்.

உத்தமர் வருகையைக் கோரி ஆயிரக் கணக்கான ஜனங்கள் அவர் பங்களாவின் வாசலில் கூடி யிருக்கிறார்கள். பங்களாவில் மாவிலைத் தோரணமும், வாழை மரமும் கட்டி எல்லோரும் அலங்காரம் செய்திருக்கிறார்கள். உத்தமரின் தர்ம ஸ்தாபனத்து ஜனங்களும், கிராமத்து ஜனங்களும் இவரால் உபகாரம் பெற்றுக்கொண்ட ஜனங்களும் உத்தமரைப் பார்த்ததும் "பிரபோ! எங்கள் தரும தேவதையே! எங்கள் மனதைக் குளிரச் செய்த தியாக மூர்த்தியே! என்று கதறியவாறு காலில் விழுந்தார்கள். ஆநந்தக் கண்ணீரை ஆறு போல ஓட விட்டார்கள். இத்தனை ஜனங்களின் அன்பு மழையைக் காண எல்லோருடைய உள்ளமும் நெகிழ்ந்தது. யாருக்கு என்ன பதில் பேசுவதென்றே தெரியவில்லை. ஜெயமணியோ தான் பறி கொடுத்துவிட்டதாக எண்ணி இருந்த சமயம் ரொட்டிக்காரப் பையனை வந்து தன்னை யன்புடன் பார்த்துக் கொண்டிருந்தவளே தன் சகோதரியான ஸ்ரீமணி என்பதை யறிந்து பெரும் மகிழ்ச்சி யடைந்து அத்தனை குழந்தைகளுடன் அவளைக் கட்டிக்கொண்டு அப்படியே ஐக்யமாகிவிட்டாள்.

ரொட்டிக்காரரும் அவர் மனைவியும் செய்த பேருதவியை எல்லோரும் பாராட்டினார்கள். கோவிந்தனும் ஸ்ரீமணியும் செய்த மாபெருந் தியாகத்தையும் ஏற்கெனவே பிரபலித்துள்ள உத்தமரின் தியாக சிந்தையையும் உலகமே வியந்து கொண்டாடியது. காலணாப் பாட்டுக் கும்மியாகவும், பத்திரிகைகளின் மூலமாயும் இவ் விஷயங்கள் முற்றிலும் பறக்க வாரம்பித்தன. அன்றே நாயுடு முதல் போலீஸ் அதிகாரி வரையில் எல்லோரும் "உத்தமர் உத்தமரே: அவர் மீது வந்த பழிகளெல்லாம் வீணாகத் தயார் செய்தவை'' என்பதை நன்றாக ஆபீஸருக்கு நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்.

விஷயம் மிஞ்சிவிட்டதை யறிந்த அந்த கெடுமதி உத்யோகஸ்தன் பயந்து தற்கொலை செய்துகொண்டான் என்ற செய்தியும் உடனே எட்டியது. உத்தமர் மாசுகள் நீங்கப்பெற்று மாசிலாத உத்தமராக பழயபடியே விளங்கத் தொடங்கினர். அன்று பேராரவாரப் பெரும் விருந்து உயர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற வித்யாசமின்றி ஆயிரக்கணக்கான ஹரி ஜனங்களுக்குச் செய்ததோடு அப்பக்கத்திலுள்ள அனேக சேரிகளின் வேலைகளைத் தாமே மேற்கொண்டு நடத்துவதாயும், அதற்கான சகல பொறுப்பும் தான் வகிப்பதாயும் உத்தமர் மகாத்மா காந்தி தாதாவுக்குக் கடிதம் களிப்புடனனுப்பினர். சட்டப்படி குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்கள்.

உத்தமர் "இந்த படாடோபமான வீடும் வாசலும் பகட்டாக விருப்பதனாலன்றோ இத்தனை ஆபத்துகள்! இனி எதுவும் வேண்டுவதில்லை'' என்று தீர்மானித்துத் தம்முடைய விஸ்தீரணமான பங்க

ளாவை முற்றும் ஹரி ஜனங்களுக்கு ஒரு பகுதியில் பள்ளிக்கூடமும்,ஒரு பகுதியில் கைத்தொழிற் சாலையும் அமர்த்திவிட்டு அவர் துறவிபோலவே ஆய்விட்டார். அவருடைய நிழலாகிய ரங்கமணியின் நிலைமையைக் கூறவேண்டுமா? உத்தமரின் மனைவி உத்தமத் துறவியாகவே ஜ்வலித்தாள்.

இந்த சகலமான விவரங்களையும் அறிந்த பாலு ஓடி வந்து ஸ்ரீமணியைக் கண்டான். பழய காதல் வெள்ளம் வற்றிவிடுமா! அவர்கள் சந்தித்ததும் வெகு நாள் பிரிந்த விஷயங்களைப் பற்றிப் பேசிப் பேரானந்த மடைந்தார்கள்.

பாலு:—கண்மணீ! உன் உடல் மோட்டாரில் அகப்பட்டுக் கிடப்பதைக் காணும்போது என் ஆவி எவ்வாறு தவித்தது தெரியுமா! அதை நினைத்தால் இப்போதும் என் தேகம் நடுங்குகிறது. என் மனக் கோட்டை முற்றும் இடிந்து பொடியாகி விட்டதே! இனி என் கண்ணான ஸ்ரீமணியைப் பார்க்கப் போகிறேனா! என்று தவித்தேன்.........உம்...அந்த புராணங்கள் இனி எதற்கு? உண்மையான ஸ்ரீமணியை நானடையும்படியான பாக்கியம் பெற்ற பிறகு இனிமேல் நடக்க வேண்டிய காரியத்தை யல்லவோ செய்ய வேண்டும். கண்ணே! இனி நாம் சுகமே மணந்து வாழலாமன்றோ!

ஸ்ரீம:—பாலூ! இனிமேல் மணப்பதா! என் விஷயங்கள் முற்றிலும் உனக்குத் தெரியுமல்லவா! நான்தான் கள்ளக் கூட்டத்துத் தலைவனில் ஒருவனை மணந்தாய் விட்டதே! நான் மணமானவளன்றோ!

பாலு:—கண்ணே! நானதையறிவேன். காரணார்த்தமாகத் துப்பறியுங் காரியம் செய்தால் அது ஓர் தடையாகி விடுமா! அப்படி மணந்திருப்பினும் நானதையொரு பொருட் செய்வேனா! இதையா நீ பெரிய ஆட்சேபமாக எண்ணி இருக்கிறாய்? அட அசடே! விதவா விவாகமெல்லாம் நடக்கும் இக்காலத்தில் நீ...

ஸ்ரீ:—பாலூ! நிறுத்து. நீ கூற வரும் கருத்தையும், உலக வழக்கத்தையும் நான் அறிவேன். எனக்கென்னவோ உன்னிடம் கொண்ட அன்பு மாறவில்லை. அது இனி மாறாது. ஆனால் நான் விவாகமென்கிற பந்தத்தில் மாட்டிக்கொண்டு வேறு பொதுஜனங்கள் சேவை எதுவுமே செய்ய முடியாது. சம்சாரத் தொல்லையிலேயே உழன்று கிடக்க என் மனம் இப்போது இடங் கொடுக்கவில்லை. அம்புஜத்தைப் பார்த்து அவளுடன் பழகிய நாள்முதல்—உத்தமரின் தியாகத் தொண்டைப் பார்த்த நாள் முதல்—நம் வாழ்நாள் முழுவதையும் இப்படியே சமநிலைத் தொண்டுகளைச் செய்து, சந்தோஷமாகக்கழிக்க வேண்டுமென்ற ஆவல் உதித்து விட்டது.ஆகை

யினல் நான் இத் தீர்மானத்தினின்றும் பிறழப் போவதில்லே. என்னே மன்னிக்கவும். இது உறுதியான மொழி. பாலு! உண்மைக் காதலுக்குத் தியாகம் ஓர் பெரிதாகத் தோன்ருது. அதை நாமிருவரு மே சேர்ந்து சம நிலேத் தொண்டாற்றிச் சுகிக்கலாம் என்று தோன்றுகிறது. என்ன சொல்கிருய்?

பாலுவுக்கு இம்மொழி மிக்க அதிர்ச்சியைக் கொடுத்தது; மனந் தவித்தது...சற்று நேரம் மவுனமாக விருந்து மணியின் முகத் தையே உற்று நோக்கினன். அவளுடைய முகம் சற்றும் சலனமற்று காம்பீரமாயும், ஒரே தைரியமான உறுதியுடனும், தியாகத்துடனும் பிரகாசித்ததைக் கண்டு இவன் மனதும் ஒருவாறு தெளிய வாரம் பித்தது. "ஸ்ரீமணி இறந்துவிட்டாள் என்றதைக் கேட்ட பிறகு இதுபரியந்த மிருந்த உறுதியை நாம் ஏன் இனி இழக்கவேண்டும்? ஒரு பெண் பிள்ளேக்குள்ள தைரியமும், வீரமும் நமக்கும் இருக்க வேண்டாமா!......சரி. அவளுடன் நாமும் பொதுஜன சேவையில் ஈடுபட்டு இன்புறலாம்" என்று துணிந்தான்.

ஸ்ரீமணியின் இரு கரங்களேயும் பிடித்துக்கொண்டு "மணீ! உன் பிரியப்படியே நானும் சமநிலேத் தொண்டாற்றத் தீர்மானித்து விட்டேன்" என்ருன். "இனி நாம் மகாத்மா காந்தி கூறுகிறபடி பிரம்மச்சரிய விருதத்தை யனுஷ்டிக்கலாம்" என்று அவர்கள் முடிவு செய்து கொண்டார்கள்.

வாஸுவையும் மணியையும் பற்றிக் கூறுவது மிகையாகும் கனியும் ருசியும் போன்றவர்களல்லவா? "கண்மணீ! அன்று நீ கண் காட்சியில் களவாடி என்னேச் சோதித்த இப் பொருள்களே உனக் கென்றே நான் வாங்கி வைத்திருந்ததை நீ அப்பொழுது புறக் கணித்துவிட்டாயல்லவா! இப்போது உனது திறமைக்கு மெச்சி இதை உனக்கு சன்மானமாக அளிக்கிறேன். இப்போதும் இதை நிராகரிக்கலாகாது." என்று வாஸு பையுடன் கொடுத்தான்.

அந்த மகிழ்ச்சி மயமான அன்பின் ஆபரணமான பொருளே வாங்கிக்கொண்டு தான் என்ன பதில் பேசுவதென்று தெரியாமல் அன்பே வடிவாக ஐக்கியமாகிவிட்டாள்.

இக் காட்சியை தூரவிருந்து பார்த்துக்கொண்டே பேரானந்த மடையும் உத்தமரும், அவர் மனேவியும் அருகில் வந்து "பயந்து பிரிந்தோடவேண்டாம். இக் கண்கொள்ளாக் காக்ஷியைக் காணத்தான் நாங்கள் காத்திருந்தோம். வாஸு! நீ அன்று துப்பறிந்து கண்டு பிடித்த கள்ளியை நீயே எடுத்துக்கொள். உனக்கே அப்பொருளே சன்மானமாகக் கொடுத்துவிடுகிறேன்." என்று நகைத்துக்

கொண்டே கூறினர். அதே சமயத்தில் நாயுடுவும் அம்புஜமும் "இதென்ன அனியாயம்! ரகஸியக் கொள்ளேயாக விருக்கிறது. ஊரைக் கூட்டி பெரிய மகா சபையில் இவர்களுக்கு விலங்கு போட்டு வைத்து எங்கள் வயிற்றிற்கும் விருந்து போட்டுவிடுங்கள். அதுதான் சரியான தண்டனேயாகும்" என்ருர்கள்.

காதலரிருவரும் நாணத்திஞல் தலே குனிந்தார்கள். "என்னப்பனே! வாஸு! என்னருமை மணியை நீ உண்மையாக முழு மனத்துடன் காதலித்ததன் பயனுக நீயும் துஷ்டரிடம் அகப்பட்டுக் கொண்டு பல ஹிம்சைகளே யடைந்தாய். அதற்காக நான் என்ன புகழுரைக்கக்கூடும்? இந்த மணியைக் கொடுப்பதைத் தான் செய்ய முடியும். உன் பெற்றேரை இன்றே இவ்விடத்திற்கு அழைத்துக் கொண்டு வந்துவிடு. நாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகி சந்தோஷமாக விருக்கலாம்" என்ருர். நாயுடுகாருவுக்கும், அம்புஜத்திற்கும் செய்த மரியாதையைப் பற்றிக் கூறவேண்டுமா! அபாரமாக நடைபெற்றது.

தியாக மூர்த்தியான உத்தமரும் மற்றுமுள்ளோரும், இந்த தொழில்தான் உயர்ந்தது; இது தாழ்ந்தது என்ற பேதமின்றி எல்லோரும் வெகு உத்ஸாகத்துடன் தினந்தோறும் சேரி வேலே முதல் சீமான்களின் வேலே வரையில் செய்துகொண்டு வருகிருர்கள். எந்த சமயம் எத்தகைய தியாகத்தைச் செய்யவும் தயாராக விருப்பது வியப்பாகுமா!

சம நிலேயான தேசத் தொண்டும்,பொது ஜன சேவையும் செய்யும் அபாரமான ஆநந்தத்தில் அக் குடும்பமே ஆழ்ந்தது. தாங்கள் இதற்குமுன் அடைந்த துன்பங்களேயும் மறந்தார்கள். உத்தமர் தம் மீதிருந்த பழி நீங்கிவிட்ட பிறகு தான் கைகட்டி, வாய் புதைத்து உத்யோகம் செய்து தன் மிச்ச காலத்தையுங் கடத்தி விட்டு, பொது ஜன சேவை செய்யாதிருக்கப் பிரியப்படவில்லேயாதலால் வேலேயை ராஜிநாமா செய்துவிட்டார்.ஏராளமாகவிருக்கும் தன் செல்வம் முற்றும் தர்ம ஸ்தாபனத்திற்கே அர்ப்பணம் செய்துவிட்டுத் தினம் காலே முதல் படுக்கும் வரையில் தம்பதிகளிருவரும் வித்யாசமின்றி ஏழைகளுடன் தாமும் உழைப்பதும் அவர்கள் உண்ணும் உணவையே தாமும் உண்பதும் அவர்களுக்கும் தமக்கும் வித்யாசமின்றி வெகு ஆநந்தமாகப் பொழுது போக்க வாரம்பித்தார்.

சில தினங்களாயின. அடாடா! அவர்களின் இன்பம்—ஆநந்தம்—கரை புரண்டோடி விட்டது. அதற்குக் காரணம் யாது?

மூன்று முழம் துண்டு உடுத்திய பொக்கை வாய்த் தாதாவாகிய—த்யாகஸ்வரூபியாகிய—ஏழைப் பங்காளனென வழங்கும் அண்ணல் மகாத்மா காந்தி யடிகளிடமிருந்து உத்தமருக்கு பின்வருமாறு ஒரு கடிதம் வந்ததே யாகும். சாதாரணமாக பெரிய மனிதர் என்கிற பெயரளவில் உள்ள ஒரு பிரபுவிடமிருந்து கடிதம் வந்துவிட்டால் சில ஜனங்கள் தலை தெரியாது துள்ளுவார்கள். உலகம் போற்றும் ஒப்பிலா சாந்த மூர்த்தியாகிய காந்தி தாதாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதென்றால் பூமிக்குமேல் ஒரு முழம் எகிறிக் குதிப்பதும் வியப்பல்லவே!

உத்தமர் தமக்கு வந்த கடிதத்தைத் தம் ஆசிரமத்து ஏழைகள் உள்பட சகலருக்கும் படித்துக் காட்டினார். அது பின்வருமாறு:—

"அன்பார்ந்த உத்தமரே!

உமது அன்புததும்பிய கடிதம் பெற்றேன். என்னை நீங்கள் அத்தனை பெரிய ஸ்தோத்திரம் செய்தது மிகவும் அதியாகும். ஒவ்வொருவருடைய கடமைப்படி ஆண்டவன் ஆக்கினை செய்கிறார்; நாம் நடக்கிறோம். தாங்கள் ஹரிஜன விஷயமாயும், மற்ற தர்ம ஸ்தாபனங்களைப் பற்றியும் செய்யும் சேவையைக் கண்டு என் மனம் களிக்கின்றது. யாகம், எக்ஞம், ஜபம், தபம் முதலிய எந்த கர்மாவைச் செய்தாலும் கடவுளுக்கு மேல்குறித்த சேவைக்கு மனம் களிப்பதுபோல இவைகளால் ஆகமாட்டாது என்பது என்னுடைய நோக்கம். ஆண்டவனும் எனக்கு அந்த ஒரு தத்துவத்தைத்தான் என் அந்தராத்மாவிடம் அடிக்கடி கூறுகிறார்.

கடவுள் என்பவர் ஓர் தனித்த பண்டமல்ல. உண்ணும் பொருளல்ல. ஒரு இடத்தில் மட்டும் தனித்திருக்கும் ஜடமல்ல. ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும் கடவுள் இருக்கிறார் என்ற ரகஸியத்தை ஒவ்வொருவரும் அறிந்து கொண்டால் அதுதான் முக்கியமான பயனளிக்கும் என்பது என் உறுதி. ஆகையினால் நீங்கள், கோடிக்கணக்கான மக்கள் அன்னமின்றி. ஆடையின்றி, பிழைக்க வழி இன்றி வறுமை, பசி, நோய்—முதலிய கொடிய அரக்கர்களால் நாசமடைவதைத் தடுத்து அந்த அரக்கர்களைக் கொன்று வென்று வெற்றியடைவதுபோல அவ்வேழைகளின் வயிறு குளிரக் கஞ்சி வார்க்கும் தொழிலைச் செய்வதால் கடவுளின் மனம் பூர்ண திருப்தி யடையும் என்பதில் சற்றும் ஐயமின்று. ஆனால் ஒன்று. ஒவ்வொருவரையும் சோம்பேறியாக உட்காரவைத்து உணவளிக்கக் கூடாது. அது பெரும் தவறு. எல்லோருக்கும்

சமமான வேலைகளைக் கொடுத்து அதன் மூலம் ஜீவனம் கொடுப்பதுதான் தேச முன்னேற்றத்திற்கும், மக்களின் சுக வாழ்க்கைக்கும் வெற்றியும், மகிழ்ச்சியும் உண்டாக்கும். சமமாக சகல மக்களுக்கும் என்றும் தொழில் கொடுப்பது கதர் ஒன்று தான். அந்த பாகத்தை வளரச் செய்யுங்கள். அதுதான் சகல விதத்திற்கும் மெத்த உபகாரமாக விருக்கும் என்பதை அறியுங்கள்.

இங்ஙனம்

மோ. க. காந்தி."

ஆஹா! இக் கடிதத்தைப் படிக்கக் கேட்டதும் அபாரமான சந்தோஷத்தை யடைந்த சகலரும் ஆநந்தக் கூத்தாடினார்கள். அத்தகைய மகானைத் தரிசிக்கும் பாக்கியம் எமக்குக் கிடைக்குமா என்று ஜனங்கள் ஆரவாரித்தார்கள். "காந்திக்கு ஜே! ஜே!" என்று கத்தினார்கள்.

இந்த ஆரவாரிக்கும் ஜனங்களைப் பார்த்த உத்தமர் பெரு மகிழ்ச்சி யடைந்து "நண்பர்களே! அந்த மகாத்மாவைப் பார்க்கு முன்பே உங்கள் மனம் இத்தனை களிப்புற்று ஆநந்தப் பரவசமாகி விட்டதே! அந்த உத்தம சிரேஷ்டரின் அரிய, உயரிய ஜீவிய சரித்திரத்தையுங் கேட்டு அவர் நம் தாய் நாட்டிற்கு ஆற்றிவரும் மாபெரும் சேவையையுங் கண்டு, அன்னவரை நேரில் தரிசனமும் செய்துவிட்டால் நீங்கள் என்ன சந்தோஷமடைவீர்கள் தெரியுமா!

நேயர்களே! இனி பிரதி தினமும் இரவில் ஓய்ந்த நேரத்தில் ஒரு அரை மணி நேரம் அம் மகானின் பிரபாவத்தைப் பற்றி உங்களுக்கு உபன்யாசம் செய்யும்படிக்கு ஏற்பாடு செய்கிறேன். மேலும் மற்றொரு முக்கிய விஷயம். அதாவது அன்னாரின் சரித்திரத்தைக் கேட்பது மட்டும் போதாது; சந்தோஷமடைவது மட்டும் திருப்தியாகாது. அம் மகானுபாவனைப் போல ஒருவராலும் நடக்க முடியாது என்பது உண்மையாயினும் கூடியவரையில் நாம் பரிசுத்தமான வாழ்க்கையை கைக்கொள்ளவேண்டும். பொய், புனைசுருட்டு, திருடல், சூதாடுதல், குடிப்பது, துன்மார்க்கச் செய்கையில் பிரவேசிப்பது, மன வலிமையற்றுப் பாழாகுதல், பிறருக்குத் தீங்கு செய்வது, குடி கெடுப்பது, ஈவிரக்கமற்றிருப்பது, பிறரை அவமதிப்பது, மக்களிடம் வேற்றுமை காட்டுவது, கர்வப்படுவது முதலிய துர்க்குணங்களை ஒரு சிறிதும் கைக்கொள்ளாமல் உத்தமமான மார்க்கத்தில் நாம் பழகித் தொண்டாற்றவேண்டும்.

மகாத்மாவுக்கு அதுதான் திருப்தி தரும். அந்த தியாக மூர்த்தி ஹரிஜன சேவையின் பொருட்டு இப்போது ஓர் புனித விரதங் கொண்டு யாத்திரை கிளம்பி இருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் அவர் கூறியபடி பரிசுத்தமாக ஒற்றுமையான தொண்டர்களாக விருந்து அவரைச் சந்தோஷப்படுத்தக் கூடிய நிலைமையை அடையவேண்டும். அப்படி நாம் இருந்தால் அவர் நமது வேண்டுகோளை மறுக்கமாட்டார். நாம் அம் மகானை நமது ஊராகிய கற்பனைக் கோட்டைக்கும் விஜயம் செய்யும்படியாக அழைப்போம். அவருடைய தரிசனத்தை அக் காலை நீங்கள் எல்லோரும் பெறலாம்'' என்றார். இந்த சந்தோஷகரமான வார்த்தையைக் கேட்டு ஜனங்கள் பெரு மகிழ்ச்சி யடைந்து அன்னாளை எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஒவ்வொருவரும் தம் தம் தொழில்களைக் குறைவு படாது பூர்ண திருப்தியான மனத்தோடு ஆண், பெண்—பாலர் முதல் விருத்தர் வரையில்—செய்து வருகிறார்கள். இதைவிட அவர்களுக்கு நித்ய கல்யாண வைபவ சுகம் வேறு வேண்டுமா! தியாக மூர்த்திகளும், தியாகம் செய்யச் சித்தமாக விருப்போரும், தியாகக் கொடி தாங்கி, சமநிலைத் தொண்டு புரிந்து இன்புற்று வருகிறார்கள்.

மங்களம்.

"மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில் லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. —திருக்குறள்

சுபம்! சுபம்!! சுபம்!!!

182969

"தியாகக் கொடி"
முற்றிற்று.
ஓம் தத் ஸத்.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI" OFFICE
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

AN INNOVATION IN THE GRAMAPHONE WORLD

# HEALTH RECORDS

COMPOSED AND SUNG

BY

MRS. V. M. KOTHAINAYAKI AMMAL

Editor, "JAGANMOHINI"

EXCLUSIVELY FOR "COLUMBIA"

Other Special Recordings by tbis famous Artiste are Nursery Rhymes for Children which are instructive, educative and humorous. Let your children hear and be benefitted by them.

கிராமபோன் உலகில் ஒரு புதிய வெற்றி

## சுகாதார ரிகார்டுகள்

"கொலம்பியா" வுக்காகப் பிரத்யேகமாக ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாளால் கவனஞ் செய்து பாடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| GE. 359 | காலரா<br>க்ஷய ரோகம் | ரூ. 2-12. |
| GE. 360 | கர்ப்பிணிகள் கவனிக்கத்தக்கவை<br>குழந்தை வளர்த்தல் | ரூ. 2-12. |

---

உங்களது ஆசிரியை—பாடகரின் மற்ற ரிகார்டுகளையும் கேட்டானந்தியுங்கள்

| | | |
|---|---|---|
| GE 197 | ஏழைமுகம் பாரய்யா - ஸிந்து பைரவி<br>போகுது பார் பணம் - நட பைரவி | விலை ரூ. 2-12-0 |
| GE 205 | சொல்லுவம் வைஷ்ணவன் - பியாக்<br>சத்யாக்ரகத்தியாகி - மாண்ட் | விலை ரூ. 2-12-0 |
| GE 222 | வெட்கமில்லையோ மனத்தில் - பியாக்<br>தாயே தந்தை யென்றும் - ராகமாலிகை | விலை ரூ. 2-12-0 |
| GE. 236 | ஸந்தேகமு யாலரா 1. - கல்யாணி<br>" 2. - " | விலை ரூ. 2-12-0 |

G. E. 289. "எத்தனை ஜன்மங்கள்.", ராகமாலிகை. ரூ. 2-12-0.

## ஆர்ஸ் கொலம்பியா ஹவுஸ்,

மதராஸ்

எல்லா "கொலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

The only Tamil Novel Monthly edited by a Lady.

# JAGANMOHINI.

Editor : Mrs. V. M. KOTHAINAYAKI AMMAL

Annual Subscription Rs. 1-8-0. Single copy As. 2.

## V. M. Kothainayaki Ammal's

Thrilling Tamil Novels.

| | Rs. | As. | For Subscribers of Jaganmohini Rs. | As. |
|---|---|---|---|---|
| VAIDEHI | 2 | 8 | 2 | 0 |
| PADMASUNDAR·N | 2 | 8 | 2 | 0 |
| RADHAMANI | 2 | 8 | 2 | 0 |
| CHARULOCHANA | 2 | 8 | 2 | 0 |
| KATHALIN KANI | 2 | 8 | 2 | 0 |
| NAVANEETHA KRISHNAN | 2 | 0 | 1 | 12 |
| RUKMINI KANTHAN | 2 | 0 | 1 | 12 |
| SYAMALANATHAN | 2 | 0 | 1 | 12 |
| SHANBAGA VIJAYAM | 1 | 12 | 1 | 8 |
| GOWRI MUKUNDHAN | 1 | 12 | 1 | 8 |
| SARAMATHI | 1 | 12 | 1 | 8 |
| SOTHANAYIN KODUMAI | 1 | 8 | 1 | 4 |
| PARIMALAKESAVAN | 1 | 4 | 1 | 0 |
| UTHAMASEELAN | 1 | 4 | 1 | 0 |
| SUGUNTHA PUSHPAM | 1 | 0 | 0 | 14 |
| KADAMBAMALAI | 1 | 0 | 0 | 14 |
| GOPALARATNAM | 0 | 14 | 0 | 12 |
| NALINASEKARAN | 0 | 8 | 0 | 6 |
| VEERAVASANTHA | 0 | 8 | 0 | 6 |
| THREE DIAMONDS | 0 | 8 | 0 | 6 |
| PATATOPATHIN PARIBAVAM | 0 | 8 | 0 | 6 |
| PAKSHAMALIKA | 0 | 6 | . | . |
| JAYASANJEEVI. | 0 | 4 | . | . |

A COMPLETE SET OF 23 NOVELS POSTFREE ON RECEIPT OF Rs. 23/-

**"JAGANMOHINI" OFFICE.,**

*26, Car Street,*

TRIPLICANE. P. O. (MADRAS)

# ஸ்ரீ ராஜலக்ஷ்மி அண் கோ.

ஷண்முகநாதபுரம்.

எங்களிடம் பறவைக் கப்பல் கடிதாசிகளும் **Air Mail Letter Pads** (Papier Avion) பறவைக் கப்பல் கூடுகளும்—இந்தியாவிலிருந்து செய்கோனுக்கு (Saigon) எழுதும் கூடும், செய்கோனிலிருந்து இந்தியாவுக்கு எழுதும் கூடும் சில்லரையாகவும், மொத்தமாகவும் கொடுக்கப்படும்.

லெட்டர் பேப்பர், கவர்களில் அவரவர்கள் விலாசமும் வேண்டுமானல் அச்சடித்து அனுப்பலாம். அச்சடிக்கும் சிலவு பிரத்யேகம்.

ஒரு பக்கம் எழுதக்கூடிய பச்சை, வெள்ளை, ரோஸ் கலர் தாளில் பறவைக் கப்பல் என்று அச்சடித்தது 100 தாள் கொண்ட புத்தகம் ஒன்றுக்கு அணு 10 தான்.

செய்கோனிலிருந்து இந்தியாவுக்கு எழுதும் கவர் 2 கலரில் பறவைக் கப்பலுக்காக ஸ்பெஷலாக அச்சடித்தது கவர் 100க்கு அணு 10.

இந்தியாவிலிருந்து செய்கோனுக்கு எழுதும் கவர் 2 கலரில் அச்சடித்தது கவர் 100க்கு அணு 10.

குறிப்பு:—அன்னிய நாட்டிலுள்ள அன்பர்கள் ஆர்டருடன் முன் பணம் அனுப்ப வேண்டும்.

லெட்டர் பேப்பர், கவர் முதலியவைகளுக்கு தபால் சார்ஜ் பிரத்யேகம்.

Sri Rajalakshmi & Co,
Shanmuganathapuram P. O.
*(Ramnad Dt.) South India.*

---

# எஜண்டுகள் தேவை

"சுதந்திரம்"

## (ஒரு தமிழ் மாதப் பத்திரிகை)

உயர்ந்த பத்திரிகை — குறைந்த சந்தா

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிஞர்களால் எழுதப்படும் தேசிய, சமூக, பொருளாதார விஷயங்களைப் பற்றிய வீரம் ததும்பும் கட்டுரைகளைத் தாங்கி ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 5-ம் தேதி வெளிவரும்.

பத்திரிகை விற்பனை செய்வதற்கு எல்லா ஊர்களிலும் எஜண்டுகள் தேவை.

தனிப்பிரதி விலை அணு 1. — வருஷ சந்தா ரூ. 1.

மானேஜர்
துய்ப்ளேக்ஸ் வீதி
புதுச்சேரி.

Jaganmohini ( August 1934 ) Regd. No. M. 2210

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.




மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

அமிர்தாஞ்சன் டிபோ.,

சென்னை கல்கத்தா

பம்பாய்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS